உ

# அகத்தியர் தேவாரத்திரட்டு



அமரர்

## நவரெத்தினராசா சரஸ்வதி

அவர்களின்
சிவபதப்பேறு குறித்த
1ம் ஆண்டு நினைவாக வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

14.04.2022


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அமரர்

# நவரெத்தினராசா சரஸ்வதி

அவர்களின்
சிவபதப்பேறு குறித்த முதலாம் ஆண்டு நினைவாக
வெளியிடப்பட்ட

# நினைவுமலர்

**14.04.2022**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

இல்லறத்தில் நல்லோனாய்
குடும்பத்தின் குத்துவிளக்காய்
கணவனுக்குத் துணைவியாய்
மகற்கு ஆசானாய்
உறவிற்கு உற்றோனாய்
ஊரார்க்குப் பிரியமானவளாய்
பேரர்க்கு அன்பனாய்
பக்திக்கு வித்தகனாய் விளங்குபவளே
உன் பாதகமலத்திற்கு இந்நூல்
காணிக்கை

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

**இங்ஙனம்**
**நீங்காத நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவினில்......



அமரர்

## திருமதி.நவரத்தினராசா சரஸ்வதி

**மலர்வு: 28.04.1954** **உதிர்வு: 25.04.2021**

புலர்ந்திட்ட வருடம் பிலவ விடிபொழுது சித்திரை பன்னிரண்டு
மலர்ந்திட்ட திதி பூர்வபக்க திரயோதசி தினமன்று – உலகாளும்
உமை பாகம் அகிலாண்ட சிவனிடை நவரத்தினராசா சரஸ்வதித்தாய்
இமைப்பொழுதும் நெஞ்சில் நிறை தாளடி சேர்ந்தாள் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்.



# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## பிள்ளையார் துதி

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனிநுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

## தேவாரம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

## திருவாசகம்

அத்தனே அண்ட ரண்டமாய் நின்ற
ஆதியே யாதுமீ றில்லாச்
சித்தனே பக்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெரு மானே
பித்தனே யெல்லா வுயிருமாய்த் தழைத்துப்
பிழைத்தவை யல்லையாய் நிற்கும்
எத்தனே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை
நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த
அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி
கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண் டசுரு திப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத வின்ப வன்பு வேண்டிப்பின்
வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டு மின்னும் வேண்டும்நான்
மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன் அடியின்கீழ்
இருக்க வென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
சிற்சபேசா சிவ சிதம்பரம்

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அமரர் நவரெத்தினராசா சரஸ்வதி

## அவர்களின்

## வாழ்க்கை வரலாறு

ஈழமணித் திருநாட்டிலே வடபால் அமைந்த சப்த தீவுகளில் மங்கல இறையருளால் ஆட்கொள்ளும் ஆலயங்கள் சூழ்ந்த புண்ணிய தீவகத்தின்பால் அமைந்துள்ளது புங்குடுதீவு என்னும் தீவு.

இத்தீவின் பழம்பெருங்கிராமமாக பெருமைகொள்ளும் நடுவுத்துருத்தி என்னும் செழிப்புமிக்க கிராமத்தில் பழம்பெருங்குடியின் மூத்த குடியாளராகவும் நயினை நாகபூசணி அம்மன் ஆலய ஆதின கர்த்தா முத்துக்குமாரு அவர்களின் சகோதரியாகிய தங்கம்மா அவர்களின் வழிவந்த தாய்வழி பேத்தியார் அன்னம்மா என்னும் அம்மையார் அவர்கள் புங்குடுதீவு இறுப்புட்டியைச் சேர்ந்த உயர்குடி சுப்பிரமணியம் அவர்களின் மகனார் நமசிவாயம் எனும் பெருந்தகையை வாழ்க்கைத் துணையாக ஏற்று வாழ்க்கையை சிறப்பாக வாழ்ந்து வந்தார்கள். இருந்தும் அவர்களுக்கு குழந்தைச் செல்வம் சிறு காலம் இல்லாமையால் தாயார் பேச்சியம்மன் என்றும் பக்தர்களால் அழைக்கப்படும் அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்மனையும் நயினை நாகம்பாளினையும் இடைவிடாது வேண்டுதல்கள் செய்து வந்தனர். இதன் நற்பேறாக உயர்திரு நமசிவாயம் அன்னம்மா தம்பதிகளுக்கு பூர்வ புண்ணிய பலனாய் 1954 ம் ஆண்டு சித்திரை மாதம் 28 ஆம் திகதி மூத்த மகளாகப் பிறந்தார் அமரர் சரஸ்வதி அவர்கள். அமரர் அவர்களுடன் சரோஜினிதேவி, ரதிதேவி எனும் இரண்டு பெண் உடன் பிறப்புக்களாக வாய்க்கப்பெற்றனர்.

காலங்களின் மாற்றங்களுக்கு ஏற்ப பருவங்கள் மாற மாற பிள்ளைகளின் கல்வித்துறையில் அதீத அக்கறையுடன் பெற்றோர்கள் செயற்படத் தொடங்கினர் இதற்கு பேறாக அமரர் சரஸ்வதி அம்மையார் தனது ஆரம்பக் கல்வியினை புங்குடுதீவு குறிகாட்டுவான் மனோன்மணி கனிஷ்ட வித்தியாலயத்தில் கல்வி பயின்று பின்னர் இடைநிலை உயர்தரக் கல்வியினை புங்குடுதீவு சுப்பிரமணியம் மகா வித்தியாலயத்திலும் யாழ். மருதனாமடம் மகளீர் கல்லூரியிலும் கற்றுத் தேர்ச்சியுற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்கள் கடந்தன. பிள்ளைகளின் வாழ்விற்குரிய காலம் அரும்பத் தொடங்கியது. உரிய பொழுதில் பெற்றோர் தமது முக்கியமான கடனை தீர்க்க வேண்டிய தருணம். தமது மூத்த மகளார் அமரர் சரஸ்வதி அவர்களுக்கு ஏற்றாற்போல் நற்பண்பும் அழகும் ஆற்றலும் மிக்க துணைவராக நயினாதீவை பிறப்பிடமாகவும், தாய் வழி உரித்துடைய நயினை நாகபூசணி அம்மன் ஆதீனகர்த்தா மரபுவழி ஸ்ரீமான் முத்துக்குமாரு காசிப்பிள்ளை ஆறுமுகம் வடிவாம்பிகை இணையோர்களின் புத்திரர் நவரெத்தினராசா அவர்களை 1977 ஆம் ஆண்டு திருமணம் புரிந்து இல்லறமாகிய நல்லறத்தைச் சிறப்பாக செய்து வைத்தனர்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல்
தான்என்று ஆங்கு ஐம்புலத்துஆறு ஓம்பல் தலை"

எனும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு அமைவாக அமரர் அவர்கள் தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தன் குடும்பம் எனும் ஐந்திடத்தும் அறநெறி பேணி வாழ்தலே இல்வாழ்வின் இனிய பேறென நினைத்து அதுவே சிறந்த கடமை என மனத்தே இருத்தியவராகவே இன்புற்று வாழ்வாங்கு வாழ்ந்து வந்தார்கள். தலைமகள் அமரர் சரஸ்வதி அவர்கள் தன் கணவருடன் வவுனியா நகரில் வாழ்ந்து வந்தார்கள். இல்லறமே நல்லறமாய் இணைந்தன் பயனாக விஸ்ணுகரன், விசாகை, கௌசிகன், கார்த்திகாயினி எனும் இரண்டு ஆண்குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளுமாக நால்வரை மழலைச் செல்வங்களாக வாய்க்கப்பெற்றனர் அன்பையும் அறிவையும் ஒருங்கே ஊட்டி வளர்க்கும் பாசமிகு தாயாக இறுதிவரை வாழ்ந்து நின்ற அமரர் அவர்கள் பிள்ளைகளுக்கு உயர்நிலை கல்வி வரை பயிற்றுவித்து அனைவரையும் நல்லதொரு நிலைக்கு உருவாக்கி அகமகிழ்வு கொண்டார்.

இதன் பயனாக தனது மூத்தமகன் விஸ்ணுகரனை அவரது எதிர்கால வாழ்நிலையைக் கருத்திக் கொண்டு தொழிலின் நிமித்தம் பிரான்ஸிற்கு அனுப்பி வைத்ததுடன் இளைய மகனார் கௌசிகனை கல்வியினை தொடர்வதற்காக இலண்டனுக்கு அனுப்பி வைத்ததுடன் மூத்த மகளார் விசாகை கணனித்துறையில் பட்டதாரியாக்கி ஆசிரியராகப் பணியாற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்ததுடன் இளைய மகளார் காத்திகாயினியை இந்துநாகரிகத்துறையில் பட்டதாரியாக்கி ஆசிரியராக பணியாற்ற வைத்து தொழில்துறையில் பிள்ளைகள் விளங்க வேண்டுமென்ற தனது நீண்டகால விருப்பத்தினை நிறைவு செய்தார் எனலாம்.

பிள்ளைகளின் மண வாழ்வினை சதா நினைவில் இருத்தி தனது அன்புத் துணைவரின் ஆலோசனைகளையும் கருத்திற் கொண்டு தனது மூத்த மகளுக்கு வேலணை சோளாவத்தையைச் சேர்ந்த திரு.தவராசா கலாமணி தம்பதிகளின் கனிஸ்ட புத்திரன் கஜேந்திரனையும், மகனார்க்கு புங்குடுதீவைச் சேர்ந்த தில்லைநாதன் அன்னபூரணி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி பிருந்தா அவர்களையும், இளைய மகனார்க்கு உரும்பிராயைச் சேர்ந்த தவபாதம் தனலெட்சுமி அவர்களின் புத்திரி சுஜிதா அவர்களினையும், தனது கனிஷ்ட புத்திரியை நெடுந்தீவைச் சேர்ந்த தம்பனையை வசிப்பிடமாகக் கொண்ட கதிரவேலு தங்கரெத்தினம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் கேதீஸ்வரனையும் மருமக்களாகவும் கண்டு, இதன் பயனாக சின்மகி, பார்கவி, காசினி, சபரிவாசன், ஜெஸ்வந், தர்மிகன், கர்சிகன் எனப் பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தார்.

"தற்காத்து தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்வுஇலான் பெண்"

– வாழ்க்கைத் துணை நலம் குறள் 56 இல்

வள்ளுவப் பெருந்தகை எடுத்துரைத்தற்கு இணங்க கற்பு நெறியில் தன்னையும் பாதுகாத்துக் கொண்டு தன் கணவனையும் காப்பாற்றி தகுதியமைந்த புகழையும் காத்துச் சோர்வு இன்றி வாழ்ந்து சிறந்த பெண்ணின் வாழ்நிலையை அமரர் அவர்கள் எடுத்துக்காட்டியவராகவே தனது கணவரின் சமயத் தொண்டும் சமூகப் பணிகளும் சீராகச் செயல்பட பக்கபலமாக இருந்து செயல்பட்டார். இவை கண்டு பலரும் போற்ற மனம் பூரித்தார். இவை யாவும் தன் பெற்றோரும் தானும் பெற்ற தவப்பயன் எனக்கூறிப் பலரும் வாழ்த்த தன் வாழ்வு போதும் எனக் கருதி சித்திரைத் திங்கள் 12ம் நாள் (25.04.2021) வளர்பிறை சதுர்தசி கூடிய ஞாயிறு தன் உயிர் நீத்தார்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அகத்தியர்
# தேவாரத் திரட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுப்புரை

இப்பூவுலகில் பல்வேறு சமயங்கள் இருப்பினும் இவை ஒவ்வொன்றிற்கும் காலவரையறைகள் உண்டு. எவை எவை எப்போது தோற்றம் பெற்றன என்று குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு சான்றுகள் உள்ளன. அவை அனைத்தும் ஒவ்வொரு ஆசிரியர்களால் தோற்றுவிக்கப்பட்டன. ஆனால் எமது சைவ சமயம் மட்டுமே காலத்தைக் கடந்ததாக ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியினால் தோற்றுவிக்கப்பட்டதாகும். இறைவனால் அளிக்கப்பட்டமையால் இது கால எல்லை அறியப்படாததாகின்றது.

தென்னாடுடைய சிவனின் சைவத்திருமுறைகள் பன்னிரண்டாகும் அவை திருஞான சம்பந்தர் முதலாகச் தெய்வச் சேக்கிழார் ஈறாக இருபத்து ஏழு அருளாசிரியர்கால் அருளிச் செய்யப்பட்டவையாகும். இவற்றின் மகத்துவமும் அவற்றினை உளமுருகி இறை நம்பிக்கையுடன் ஆசாரமாய் ஓதுவதன் பலன் நாம் சொல்லி அறியவேண்டிய தொன்றல்ல.

இந்த வகையில் சைவத்திருமுறைகளில் உள்ள முதல் மூன்று தெய்வீகப் புலவவர்களாகிய சமய குரவர்களினால் அருளப் பெற்ற தேவாரத் திருப்பதிகங்களை தோத்திர திரட்டு எனும் நாமஞ்சூட்டி முதலாவது தோத்திரத் திரட்டாகி மலரும் “அகத்தியர் தேவாரத் திரட்டு” ஆகும். அதாவது இது சிவாலய முனிவர் பொருட்டு அகத்திய மாமுனிவர் தொகுத்தருளியதாகும். தேவார அடங்கன் முறையில் இருந்து குருவருள், பரையின் வரலாறு, அஞ்செழுத்துண்மை, கோயிற்திறம், சிவனுருவம், திருவடி, அருச்சனை, அடிமை என்னும் எண் நிலைகளில் அடங்கிய இருபத்தைந்து திருப்பதிகங்களைத் தன்னுட் கொண்டதாக விளங்குகின்றது. அகத்தியர் தேவாரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரட்டானது தேவார மூவரின் அடங்கன் முறைப் பதிகத்திரட்டு என்று சொல்லப்படுகிறது.

இந்நூலானது சைவப்பெருமக்கள் அனைவரும் போற்றிப் பாராயணம் செய்ய வேண்டிய அருள் நூலாகும். தற்காலத்தில் மக்கள் முகங்கொடுக்கும் உடல் உளச் சோதனைகளுக்கும் நவீன உலகில் விரைவான கால ஓட்டத்தில் வாழும் மக்களுக்கு உகந்ததொரு நூலாக

" ஞாலம் கருதினும் கைகூடும்
காலம் கருதி இடத்தால் செயின்"

எனும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு ஏற்றாற்போல் காலத்தே தோன்றி நாள்தோறும் பாராயணம் செய்யும் அடியார்கள் மனத்தில் பேரின்பம் கிடைப்பதோடு நல்லாற்றுப்படுத்திச் சிவகதிக்கு இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

**சிவமணி கா.ஆறுமுகம் நவரத்தினராசா சிவம்**
(அறங்காவலர், அருளகம்)
ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருக்கோவில்,
கோவிற்குளம்,
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருத்தொண்டர் புராணசாரம்

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

காழிநகர்ச் சிவபாத விதயர் தந்த
கவுணியர்கோன் அமுதுமையாள் கருதி யூட்டும்'
ஏழிசையின் அமுதுண்டு தாளம் வாங்கி
இலங்கியநித் திலச்சிவிகை இசைய ஏறி
வாழும்முய லகன்அகற்றிப் பந்தர் ஏய்ந்து
வளர்கிழிபெற்(று) அரவின்விடம் மருகல் தீர்த்து
வீழிநகர்க் கா(சு)எய்தி மறைக்கதவம் பிணித்து
மீனவன்மே னியின் வெப்பு விடுவித் தாரே.

ஆரெரியிட்(டு) எடுத்தஏ டவைமுன் னேற்றி
ஆற்றலிடும் (ஏடு) எதிர்போய் அணைய ஏற்றி
ஓரமணர் ஒழியாமே கழுவில் ஏற்றி
ஓதுதிருப் பதிகத்தால் ஓடம் ஏற்றிக்
காருதவும்' இடீபுத்தன் தலையில் ஏற்றிக்
காயாத பனையின்முது கனிகள் ஏற்றி
ஈரமிலா அங்கம்உயிர் எய்த ஏற்றி
இலங்குபெரு மணத்(து) அரனை எய்தி னாரே.

## திருநாவுக்கரசு சுவாமிகள்

போற்றுதிரு வாமூரில் வேளாண் தொன்மைப்
பொருவில் கொறுக் கையர் அதிபர் புகழ னார்பால்
மாற்றரும் அன் பினில்திலக வதியாம் மாது
வந்துதித்த பின்புமரு ணீக்கி யாரும்
தோற்றி அமண் சமயமுறு துயரம் நீங்கத்
துணைவர் அருள் தரவந்த சூலை நோயால்
பாற்றருநீள் இடர்எய்திப் பாடலிபுத் திரத்தில்
பாழியொழித்(து) அரன் அதிகைப் பதியில் வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துதமக் கையர் அருளால் நீறு சாத்தி
வண்டமிழால் நோய்தீர்ந்து வாக்கின் மன்னாய்
வெந்தபொடி விடம்வேழம் வேலை நீந்தி
வியன்சூலங் கொடி இடபம் விளங்கச் சாத்தி
அந்தமில் அப் பூதிமகன் அரவு மாற்றி
அருட்காசு பெற்றுமறை அடைப்பு நீக்கிப்
புந்திமகிழ்ந்(து) ஐயாற்றில் கயிலை கண்டு
பூம்புகலூர் அரன்பாதம் பொருந்தி னாரே.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்

தண்கயிலை யதுநீங்கி நாவ லூர்வாழ்
சைவனார் சடையனார் தனய னாராய்
மண்புகழ அருட்டுறையான் ஓலை காட்டி
மணம்விலக்க வன்றொண்டாய் அதிகை சேர்ந்து
நண்பினுடன் அருள்புரிய ஆரூர் மேவி
நலங்கிளரும் பரவைதோள் நயந்து வைகித்
திண்குலவும் விறன்மிண்டர் திறல்கண்டு ஏத்துந்
திருத்தொண்டத் தொகையருளால் செப்பினாரே.

செப்பலருங் குண்டையூர் நெல்லை மைத்துத்
திருப்புகலூர்ச் செங்கல் செழும் பொன்னாச்செய்து
தப்பில் முது குன்றர் தரும் பொருள்' ஆற் றிட்டுத்
தடத்தெடுத்துச் சங்கிலிதோள் சார்ந்து நாதன்
ஒப்பில்தனித் தூதுவந்தா நூடு கீறி
உறுமுதலை சிறுமதலை உமிழ நல்கி
மெய்ப்பெரிய களி றேறி அருளால் சேர
வேந்தருடன் வடகயிலை மேவி னாரே.

## சமயகுரவர் திருநாள்

சித்திரைச் சதயம் அப்பர் சிறந்தவை காசி மூலம்
அத்தரைப் பணிசம் பந்தர் ஆனிமா மகத்தில் அந்த
முத்தமிழ் வாத வூரர், முதியநல் ஆடி தன்னில்
சுத்தமாஞ் சோதி நாளில் சுந்தரர் கயிலை சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

அகத்தியமாமுனிவர் திரட்டியருளிய

# தேவாரத்திரட்டு

## தேவாரம் நுதலிய பொருள்

### நேரிசை வெண்பா

குருவருளும் வெண்ணீ றெழுத்தஞ்சுங் கோயில்
அரனுருவு மென்றலைமே லாக்கும் - திருவடியும்
சிட்டான அர்ச்சனையுந் தொண்டுஞ்சிவாலயர்க்கென்(று)
இட்டார் அகத்தியனார் எட்டு.

(குருவருள், பரையின் வரலாறு (திருவெண்ணீறு), அஞ்செழுத்துண்மை, கோயிற்றிறம், சிவனுருவம், திருவடி, அருச்சனை, அடிமை என்னும் எட்டு நிலைகளும் தேவாரத் திரட்டின் திருவுள்ளக்கிடை ஆகும்.)

## தேவாரத் திருப்பதிகக் கருத்துரை நிலைமண்டில ஆசிரியப்பா

தோடு கூற்றுப் பித்தா மூன்றும்

பீடுடைத் தேசிகன் பேரரு ளாகும்

நீற்றுப் பதிகம் நிகழ்த்துங் காலை

மாற்றுப் பரையின் வரலா றாகும்

துஞ்சல் காதல் சொற்றுணை மற்றும்

அஞ்செழுத் துண்மை அருளிய தாகும்

ஆரூர் தில்லை காட்டூர் மூன்றும்

சீரார் கோயிற் றிறமைய தாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓருரு வரிய பாளை வடிவே

மருவா றென்ற வண்டமிழ் ஐந்தும்

திருவார் மேனிச் செய்திய தாகும்

பொடியுடை அரவணை அந்த ணாளன்

அடியிணை தந்த வருளே யாகும்

பந்து வேற்றா கொன்றிவை மூன்றும்

நந்தலில் அருச்சனை நாட்டிய தாகும்

வேய்குலந் தில்லை எனுமிவை மூன்றும்

நாயனும் அடிமையும் நாட்டிய தாகும்

இப்பரி (சு) அகத்திய முனிவன் இருநிலத்(து)

ஒப்பரு மூவ ரோதுதே வாரம்

முழுதையுஞ் சிவாலய முனிக்(கு) அறிவித்துப்

பழுதிலா அவையுட் பரிந்தெடுத்(து) இருபத்

தைந்துயர் பதிகமும் அறிவுறத் திரட்டி

எண்ணரும் அடங்கல் யாவையும் உணரும்

புண்ணியம் இவைகொடு பொருந்து மென்றவன்

தனக்கருள் செய்தனன் தகவுற அதனால்

தீதிலா அகத்தியத் திரட்டினை உலகில்

ஓதினர் அடங்கலும் ஓதினர் ஆவரே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

# திருப்பிரமபுரம்

முதற்றிருமுறை பண் : நட்டபாடை

### குருவருள்

**(சிவபுண்ணிய விளைவால் மூர்த்தி தலம் தீர்த்தங்களை வழிபட, இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் உண்டாக, அப்போது இறைவன் குருவடிவாகி எழுந்தருளி அருள்புரியும் நிலையே குருவருள் ஆகும்.)**

திருச்சிற்றம்பலம்

தோடு டையசெவி யன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடு டையசுட லைப்பொடி பூசியென்' உள்ளங் கவர்கள்வன்
ஏடு டையமல ரான்முனை நாட்பணிந் தேத்த வருள்செய்த
பீடு டையபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. 1

முற்ற லாமையிள நாகமோ டேன முளைக்கொம் பவைபூண்டு
வற்ற லோடுகல னாப்பலி தேர்ந்தென துள்ளங் கவர்கள்வன்
கற்றல் கேட்டலுடை யார்பெரி யார்கழல்கையால் தொழுதேத்தப்
பெற்ற மூர்ந்தபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. 2

நீர்ப ரந்தநிமிர் புன்சடை மேலோர் நிலாவெண் மதிசூடி
ஏர்ப ரந்தவின வெள்வளை சோரஎன் உள்ளங் கவர்கள்வன்
ஊர்ப ரந்தவுல கின்முத லாகிய ஒரு ரிதுவென்னப்
பேர்ப ரந்தபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. 3

விண்ம கிழ்ந்தமதி லெய்தது மன்றி விளங்கு தலையோட்டில்
உண்ம கிழ்ந்துபலி தேரிய வந்தென துள்ளங் கவர்கள்வன்
மண்ம கிழ்ந்த அர வம்மலர்க் கொன்றை மலிந்த வரைமார்பில்
பெண்ம கிழ்ந்தபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. 4

ஒருமை பெண்மையுடை யன்சடை யன்விடையூரும் மிவனென்ன
அருமை யாகவுரை செய்ய வமர்ந்தென துள்ளங் கவர்கள்வன்
தருமை பெற்றகடல் கொள்ளமி தந்ததோர் காலம் மிதுவென்னப்
பெருமை பெற்றபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைக லந்தவொலி பாடலோ டாடல ராகி மழுவேந்தி
இறைக லந்தவின வெள்வளை சோரஎன் உள்ளங் கவர்கள்வன்
கறைக லந்தகடி யார்பொழில் நீடுயர் சோலைக் கதிர்சிந்தப்
பிறைக லந்தபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. 6

சடைமு யங்குபுன லன்னன லன்னெறி வீசிச் சதிர்வெய்த
உடைமு யங்குமர வோடுழி தந்தென துள்ளங் கவர்கள்வன்
கடன்மு யங்குகழி சூழ்குளிர் கானலம் பொன்னஞ் சிறகன்னம்
பெடைமு யங்குபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. 7

வியரி லங்குவரை யுந்திய தோள்களை வீரம் விளைவித்த
உயரி லங்கையரை யன்வலி செற்றென துள்ளங் கவர்கள்வன்
துயரி லங்குமுல கிற்பல வூழிகள் தோன்றும் பொழுதெல்லாம்
பெயரி லங்குபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. 8

தாணுதல் செய்திறை காணிய மாலொடு தண்டா மரையானும்
நீணுதல் செய்தொழி யந்நிமிர்ந் தானென துள்ளங் கவர்கள்வன்
வாணுதல் செய்மக ளிர்முத லாகிய வையத் தவரேத்தப்
பேணுதல் செய்பிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. 9

புத்த ரோடுபொறி யில்சம ணும்புறங் கூற நெறிநில்லா
ஒத்த சொல்லவுல கம்பலி தேர்ந்தென துள்ளங் கவர்கள்வன்
மத்த யானைமறு கவ்வுரி போர்த்ததோர் மாயம் மிதுவென்னப்
பித்தர் போலும்பிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. 10

அருநெ றியமறை வல்ல முனியகன் பொய்கை யலர்மேய
பெருநெ றியபிர மாபுர மேவிய பெம்மா னிவன்றன்னை
ஒருநெ றியமனம் வைத்துணர் ஞானசம் பந்தன் னுரைசெய்த
திருநெ றியதமிழ் வல்லவர் தொல்வினை தீர்த லெளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்

**பாடம் : 1. பூசி எனது. இத்தலம் சோழநாட்டில் காவிரிக்கு வடகரையில் உள்ளது. சுவாமி : பிரமபுரீசுவரர், தோணியப்பர் தேவி திருநிலைநாயகி இப்பதிகம், சீகாழிப்பதியில் பிரமதீர்த்தக் கரையிலே தோணிப்பர் உமாதேவியாருடன் எழுந்தருளி, அழும் ஞானசம்பந்தருக்குச் சிவஞானப் பாலை ஊட்டியருளப், பாலறாவாயராய் நின்ற பிள்ளையாரைச் சிவபாதவிருதயர் "உனக்குப் பாலூட்டியவர் யார்" என்று கோபித்து அதட்டிய போது திருஞானசம்பந்த சுவாமிகள் தமக்குப் பால் ஊட்டி ஆட்கொண்டருளிய தோணியப்பரைத் தமது வலக்கரத் திருவிரலால் சுட்டிக் காட்டி ஓதி அருளியதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாவுக்கரசு சுவாமிகள்

# திருவதிகை வீரட்டானம்

நான்காம் திருமுறை பண் : கொல்லி

### குருவருள்

திருச்சிற்றம்பலம்

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்றா யடிக்கே' யிரவும் பகலும்
பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. 1

நெஞ்சம் முமக்கே யிடமா கவைத்தேன்
நினையா தொருபோ துமிருந் தறியேன்
வஞ்சம் மிதுவொப் பதுகண் டறியேன்
வயிற்றோ டுதுடக் கிமுடக் கியிட
நஞ்சா கிவந்தென் னைநலி வதனை
நணுகா மற்றுரந் துகரந் துமிடீர்?
அஞ்சே லுமென்னீரதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. 2

பணிந்தா ரனபா வங்கள்பாற் றவல்லீர்
படுவெண் டலையிற் பலிகொண் டுழல்வீர்
துணிந்தே யுமக்காட் செய்துவா ழலுற்றால்
சுடுகின் றதுசூ லைதவிர்த் தருளீர்
பிணிந்தார் பொடிகொண் டுமெய்பூ சவல்லீர்
பெற்றமேற் றுகந்தீர் சுற்றும் வெண் டலைகொண்
டணிந்தீ ரடிகே ளதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னம் அடியே னறியா மையினால்
முனிந்தென் னைநலிந் துமுடக் கியிடப்
பின்னை யடியே னுமக்கா ளும்பட்டேன்
சுடுகின் றதுசூ லைதவிர்த் தருளீர்
தன்னை யடைந்தார் வினைதீர்ப் பதன்றோ
தலையா யவர்தங் கடனா வதுதான்
அன்ன நடையா ரதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. 4

காத்தாள் பவர்கா வலிகழ்ந் தமையால்
கரைநின் றவர்கண் டுகொளென்று சொல்லி
நீத்தா யகயம் புகநூக் கியிட
நிலைக்கொள்ளும்வழித் துறையொன் றறியேன்
வார்த்தை யிதுவொப் பதுகேட் டறியேன்
வயிற்றோ டுதுடக் கிமுடக் கியிட
ஆர்த்தார் புனலா ரதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. 5

சலம்பூ வொடுது பமறந் தறியேன்
தமிழோ டிசைபா டல்மறந் தறியேன்
நலந்தீங் கிலுமுன் னைமறந் தறியேன்
உன்னா மம் என்னா வில்மறந் தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வாய்
உடலுள் ளுறுசூ லைதவிர்த் தருளாய்
அலந்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. 6

உயர்ந்தேன் மனைவாழ்க் கையுமாண் பொருளும்
ஒருவர் தலைகா வலிலா மையினால்
வயந்தே யுமக்காட் செய்துவா ழலுற்றால்
வலிக்கின் றதுசூ லைதவிர்த் தருளீர்
பயந்தே யென்வயிற் றினகம் படியே
பறித்துப் புரட்டி யறுத்தீர்த் திடநான்
அயர்ந்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலித்தேன் மனைவாழ்க் கைமகிழ்ந் தடியேன்

வஞ்சம் மனமொன் றுமிலா மையினால்

சலித்தா லொருவர் துணையா ருமில்லைச்

சங்கவெண் குழைக்கா துடையெம் பெருமான்

கலித்தே யென்வயிற் றினகம் படியே

கலக்கி லக்கிட் டுக்கவர்ந் துதின்ன

அலுத்தே னடியே னதிகைக் கெடில

வீரட் டானத் துறையம் மானே. 8

பொன்போ லமிளிர் வதோர்மே னியினீர்

புரிபுன் சடையீர் மெலியும் பிறையீர்

துன்பே கவலை பிணியென் றிவற்றை

நணுகா மற்றுரந் துகரந் துமிடீர்

என்போ லிகளும் மையினித் தெளியார்

அடியார் படுவ திதுவே யாகில்

அன்பே யமையும் மதிகைக் கெடில

வீரட் டானத் துறையம் மானே. 9

போர்த்தா யங்கொரா னையின்ஈ ருரிதோல்

புறங்கா டரங்கா நடமா டவல்லாய்

ஆர்த்தா னரக்கன் றனைமால் வரைக்கீழ்

அடர்த்திட் டருள்செய் தவது கருதாய்

வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்

என்வே தனையா னவிலக் கியிடாய்

ஆர்த்தார் புனல்சூ ழதிகைக் கெடில

வீரட் டானத் துறையம் மானே. 10

திருச்சிற்றம்பலம்

**பாடம் : 1. ஏற்றாவடிக்கே, 2. கரந்தும்விடீர், 3. கரந்தும் விடீர். இத்தலம் நடுநாட்டில் உள்ளது. சுவாமி : வீரட்டேசுவரர் தேவி : திரிபுரசுந்தரி, இப்பதிகம், தம்முடைய சூலைநோய் தீரும்பொருட்டு ஓதி அருளியதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

# திருவெண்ணெய் நல்லூர்

பண் : இந்தளம் ஏழாந்திருமுறை

## குருவருள்

திருச்சிற்றம்பலம்

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அத்தாவுனக் காளாய் இனி அல்லேனென லாமே. 1

நாயேன்பல நாளுநினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆயாவுனக் களாய் இனி அல்லேனென லாமே. 2

மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அன்னேயுனக் காளாய் இனி அல்லேனென லாமே. 3

முடியேன் இனிப் பிறவேன்பெறின் மூவேன் பெற்றமூர்த்தீ
கொடியேன்பல பொய்யேயுரைப் பேனைக்குறிக் கொள்நீ
செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அடிகேளுனக் காளாய் இனி அல்லேனென லாமே. 4

பாதம்பணி வார்கள் பெறு பண்டமது பணியாய்
ஆதன்பொரு ளானேனறி வில்லேனரு ளாளா
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆதீயுனக் காளாய் இனி அல்லேனென லாமே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணார்மதி சூடீதழல் போலுந்திரு மேனீ
எண்ணார்புர மூன்றுமெரி யுண்ணநகை செய்தாய்
மண்ணார் பெண்ணைத் தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையுள்
அண்ணாவுனக் காளாய் இனி அல்லேனென லாமே. 6

ஊனாயுயி ரானாயுட லானாயுல கானாய்
வானாய்நில னானாய்கட லானாய்மலை யானாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆனாயுனக் காளாய் இனி அல்லேனென லாமே. 7

ஏற்றார்புர மூன்று மெரி யுண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர் வானீர்
ஏற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆற்றாயுனக் காளாய் இனி அல்லேனென லாமே. 8

மழுவாள்வலன் ஏந்தீமறை யோதீமங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தல் உன் தொழிலே
செழுவார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அழகாவுனக் காளாய்இனி அல்லேனென லாமே. 9

காரூர்புன லெய்திக்கரைகல்லித்திரைக் கையால்
பாரூர்புக ழெய்தித்திகழ் பன்மாமணி உந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆரூரன்எம் பெருமாற்கா ளல்லேனென லாமே. 10

திருச்சிற்றம்பலம்

**இத்தலம், நடுநாட்டில் உள்ளது. சுவாமி : தடுத்தாட்கொண்டநாதர்: தேவி - வேற்கண்நாயகியம்மை. இப்பதிகம் திருமணக்காலத்தில் சிவபெருமான் வழக்கிட்டுத் தடுத்தாட் கொண்டபோது ஓதி அருளியதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

# திருவாலவாய் திருநீற்றுப்பதிகம்

இரண்டாந்திருமுறை பண் : காந்தாரம்

## பரையின் வரலாறு

**(குருவருள் பெற்ற ஆன்மா, முதல்வனது பராசக்தியின் விளக்கமுற்றுச் சிவயோக நிட்டையில் அழுந்தி நிற்கும் நிலையே பரையின் வரலாறு ஆகும்.)**

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே. 1

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. 2

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே. 3

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே. 4

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. 6

எயிலது அட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே. 7

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆல வாயான் திருநீறே. 8

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் ஆல வாயான் திருநீறே. 9

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங்கூடக்'
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆல வாயான் திருநீறே. 10

ஆற்ற லடல்விடை யேறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னன் உடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

**பாடம்: 1. சத்தியுமாவது, 2. ஆலமு துண்ட, 3. கூடாக். இத்தலம், பாண்டிய நாட்டில் உள்ளது. சுவாமி : சொக்கலிங்கப் பெருமான் தேவி : மீனாட்சியம்மை. இப்பதிகம், கூன்பாண்டியற்கு உற்ற சுரப்பிணியைத் திருவெண்ணீற்றினால் தீர்க்கும் பொருட்டு ஓதி அருளியதாகும் அதனால் இது திருநீற்றுப்பதிகம் எனப்பெயர் பெறும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

# பஞ்சாக்கரத் திருப்பதிகம்

மூன்றாந்திருமுறை - பொது பண் : காந்தாரபஞ்சமம்

### அஞ்செழுத்துண்மை

**பராசக்தி வியாபகத்தில் அழுந்தி நிட்டை கூடிய நிலை கைகூடும் பொருட்டுப் பஞ்சாக்கரத்தை ஓதும் முறையில் ஓதிச் சிவோகம் பாவனை புரியும் அநுபூதி நிலையே அஞ்செழுத் துண்மை ஆகும்.**

திருச்சிற்றம்பலம்

துஞ்சலுந் துஞ்ச லிலாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே. 1

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்(கு)
அந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே. 2

ஊனி லுயிர்ப்பை ஒடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்(து)
ஏனை வழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆன கெடுப்பன அஞ்செ ழுத்துமே. 3

நல்லவர் தீயரெ னாது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன்றமர் கொண்டு போமிடத்(து)
அல்லல் கெடுப்பன அஞ்செ ழுத்துமே. 4

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்(து)
அங்குள பூதமும் அஞ்ச வைம்பொழில்
தங்கர வின்படம் அஞ்சுந் தம்முடை
அங்கையி லைவிர லஞ்செ ழுத்துமே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும்ம லிருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை அஞ்செ ழுத்துமே. 6

வீடு பிறப்பை யறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாடொறும்
மாடு கொடுப்பன மன்னு மாநடம்
ஆடி யுகப்பன அஞ்செ ழுத்துமே. 7

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டை யிராவணன் பாடி யுய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்
கண்ட மளிப்பன அஞ்செ ழுத்துமே. 8

கார்வணன் நான்முகன் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வண மாவன அஞ்செ ழுத்துமே. 9

புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன அஞ்செ ழுத்துமே. 10

நற்றமிழ் ஞானசம் பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்ன னுன்னிய
அற்றமில் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்
துற்றன வல்லவர் உம்ப ராவரே. 11

திருச்சிற்றம்பலம்

**பாடம் : 1. அஞ்சு தம்முடை, 2. தெய்து போழ்தினும், 3. பண்டவிராவணன். இப்பதிகம் சீகாழிப்பதியில் தமக்கு உபநயனச் சடங்கு நடந்த காலத்தே ந்தணர்கள் யாவர்க்கும் அஞ்செழுத்தின் உண்மையினை ஓதி அருளியதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

## நமச்சிவாயத் திருப்பதிகம்

மூன்றாந்திருமுறை - பொது பண் : கௌசிகம்

### அஞ்செழுத்துண்மை

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாம நமச்சி வாயவே. 1

நம்பு வார்நமர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெலாம்
நம்பன் நாம நமச்சி வாயவே. 2

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்
தக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராய்த்தகு விப்பது
நக்கன் நாம நமச்சி வாயவே. 3

இயமன் தூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோவல் லார்தமை நண்ணினால்
நியமந் தான்நினை வார்க்கினி யான்நெற்றி
நயனன் நாம நமச்சி வாயவே. 4

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாம நமச்சி வாயவே. 5

மந்த ரம்மன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாம நமச்சி வாயவே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயி னுருத்திரர்
விரவி? யேபுகு வித்திடு மென்பரால்
வரதன் நாம நமச்சி வாயவே. 7

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்
தலம்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொள் நாம நமச்சி வாயவே. 8

போதன் போதன கண்ணனு மண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி யலந்தவர்
ஓது நாம நமச்சி வாயவே. 9

கஞ்சி மண்டையர் கையினுண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே. 10

நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யான்மகிழ்ந் தேத்தவல் லாரெல்லாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே. 11

திருச்சிற்றம்பலம்

**பாடம் : 1. நம்புவாரவர், 2. நிரவி, 3. நஞ்சுள். இப்பதிகம் : திருநல்லூர்ப் பெருமணத்தில் (ஆச்சாபுரத்தில்) திருமணக் காலத்தில் சிற்சோதி தோன்றிய போது, வீட்டு நெறியினை அறிவுறுத்தவும், சிற்சோதியில் கலப்போர் பாசம் நீங்கவும் ஓதி அருளியதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாவுக்கரசு சுவாமிகள்

# நமச்சிவாயத் திருப்பதிகம்

நான்காம் திருமுறை - பொது பண் : காந்தாரபஞ்சமம்

### அஞ்செழுத்துண்மை

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. 1

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே. 2

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே. 3

இடுக்கண்பட் டிருக்கினும் இரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று' வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளின் நாம் உற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே. 4

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கலம் அருமறை ஆறங்கம்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சி வாயவே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமிலன் நாடோறும் நல்கு வான்நலன்
குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே. 6

வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்
கூடினார் அந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே. 7

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே. 8

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே. 9

மாப்பிணை தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்(து)
ஏத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே. 10

திருச்சிற்றம்பலம்

**பாடம் : 1. பிராரென்று 2. கூடச். இப்பதிகம், சமணர்கள் கற்றூணிற் கட்டிக் கடலிலே வீழ்த்திய போது ஓதி அருளியதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

# திருப்பாண்டிக் கொடுமுடி

ஏழாந் திருமுறை பண் : பழம்பஞ்சுரம்

## அஞ்செழுத்துண்மை

திருச்சிற்றம்பலம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாவுனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. 1

இட்டன் நும்மடி ஏத்து வாரிகழ்ந்
திட்ட நாள்மறந் திட்டநாள்
கெட்ட நாளிவை யென்ற லாற்கரு
தேன்கி ளர்புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்ட டிதொழு
தேத்து பாண்டிக் கொடுமுடி
நட்ட வாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. 2

ஓவு நாளுணர் வழியு நாளுயிர்
போகு நாளுயர் பாடைமேற்
காவு நாளிவை என்ற லாற்கரு
தேன்கி ளர்புனற் காவிரிப்
பாவு தண்புனல் வந்தி பரஞ்
சோதி பாண்டிக் கொடுமுடி
நாவ லாவுனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லை யில்புகழ் எம்பி ரானெந்தைய
தம்பி ரான்என்பொன் மாமணி
கல்லை யுந்திவ ளம்பொழிந்திழி
காவி ரியதன் வாய்க்கரை
நல்ல வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
வல்ல வாவுனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. 4

அஞ்சி னார்க்கரண் ஆதி யென்றடி
யேனு நான்மிக அஞ்சினேன்
அஞ்ச லென்றடித் தொண்ட னேற்கருள்
நல்கி னாய்க்கழிகின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவை மார்குடைந்
தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்ச ணிகண்ட நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. 5

ஏடு வானிளந் திங்கள் சூடினையென்பின்
கொல்புலித்தோலின் மேல்
ஆடு பாம்பத ரைக்க சைத்த
அழகனே யந்தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்தி ழிபரஞ்
சோதி பாண்டிக் கொடுமுடிச்
சேட னேயுனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. 6

விரும்பி நின்மலர்ப் பாத மேநினைந்
தேன்வி னைகளும் விண்டனன்
நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெழில்பெற
நின்ற காவிரிக் கோட்டிடைக்
குரும்பை மென்முலைக் கோதை மார்குடைந்
தாடு பாண்டிக் கொடுமுடி
விரும்ப னேயுனை நான்ம றக்கினும்
சொல்லும்நா நமச்சி வாயவே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்பொ னேர்சடை யாய்தி ரிபுரந்
தீயெ ழச்சிலை கோலினாய்
வம்பு லாங்குழ லாளைப் பாகம்
அமர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேற்குயில் கூவ மாமயில்
ஆடு பாண்டிக் கொடுமுடி
நம்ப னேயுனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. 8

சார ணன்தந்தை எம்பி ரானெந்தை
தம்பி ரானென்பொன் மாமணியென்று
பேரெ ணாயிர கோடி தேவர்
பிதற்றி நின்று பிரிகிலார்
நார ணன்பிர மன்தொ ழுங்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடிக்
கார ணாவுனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. 9

கோணி யபிறை சூடி யைக்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
பேணி யபெரு மானைப் பிஞ்ஞகப்
பித்த னைப்பிறப் பில்லியைப்
பாணு லாவரி வண்ட றைகொன்றைத்
தார னைப்படப் பாம்பரை
நாண னைத்தொண்ட னூரன் சொல்லிவை
சொல்லு வார்க்கில்லைத் துன்பமே. 10

திருச்சிற்றம்பலம்

**இத்தலம் : கொங்குநாட்டில் உள்ளது. சுவாமி : கொடுமுடிநாதர் தேவி : பண்மொழியம்மை. இப்பதிகம் : "உன்னை நான் மறக்கினும் (மறக்கேன் - அப்படி மறந்தாலும்) என்னுடைய நா உன் நாமத்தைச் சொல்லிக் கொண்டிருக்கும்" என்று அன்போடு ஓதி அருளியதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

## திருக்ஷேத்திரக்கோவை

இரண்டாந் திருமுறை - பொது பண் : இந்தளம்

### கோயிற்றிறம்

**(அநுபூதி நிலைபெற்ற ஆன்மா ஒரோ வழி தன் அறிவு புறத்தே சென்று ஈடுபடின் அதனைத் தன்வசப்பட ஆலயங்கள் தோறும் சென்று இறைவனைத் தரிசித்துத் திரிகரணங்களையும் ஒரு வழிப்படுத்திச் சிவத்தின் பாலாக்கும் நிலையே கோயிற்றிறம் ஆகும்.)**

திருச்சிற்றம்பலம்

ஆரூர் தில்லையம் பலம்வல் லந்நல்லம்
வடகச் சியுமச் சிறுபாக்க நல்ல
கூரூர் குடவாயில் குடந்தை வெண்ணி
கடல்சூழ் கழிப்பாலை தென்கோடி பீடார்
நீரூர் வயல்நின்றி யூர்குன்றி யூருங்
குருகா வையூர் நாரையூர் நீடுகானப்
பேரூர் நன்னீள் வயல்நெய்த் தானமும்
பிதற்றாய் பிறைசூ டிதன் பேரிடமே.

அண்ணா மலையீங்கோ யும் அத்தி முத்தா
றகலா முதுகுன் றங்கொடுங் குன்றமுங்
கண்ணார் கழுக்குன் றங்கயிலை கோண்
பயில்கற் குடிகா ளத்திவாட் போக்கியும்
பண்ணார் மொழிமங்கை யோர்பங் குடையான்
பரகுன் றம்பருப் பதம்பேணி நின்றே
எண்ணாய் இரவும் பகலும்
இடும்பைக் கடல்நீந் தலாங்கா ரணமே.

அட்டான மென்றோ தியநா லிரண்டும்
அழகன் னுறைகா வனைத்துந் துறைகள்
எட்டாந் திருமூர்த்த தியின்கா டொன்பதுங்
குளமூன் றுங்களமஞ் சும்பாடி நான்கும்
மாட்டார் குழலாள் மலைமங்கை பங்கன்
மதிக்கும் மிடமா கிய பாழி மூன்றும்
சிட்டா னவன்பா சூரென்றே விரும்பாய்
அரும்பா வங்களா யினதேய்ந் தறவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறப்பள்ளி அகத்தியான் பள்ளி வெள்ளைப்
பொடிப்பூசிநீ றணிவா' னமர்காட்டுப் பள்ளி
சிறபள்ளி சிராப்பள்ளி செம்பொன் பள்ளி
திருநனி பள்ளி சீர்மகேந் திரத்துப்
பிறப்பில் லவன்பள்ளி வெள்ளச் சடையான்
விரும்பும் மிடைப்பள் ளிவண்சக் கரமால்
உறைப்பா லடிபோற் றக்கொடுத்த பள்ளி
உணராய் மடநெஞ்ச மேயுன்னி நின்றே.

ஆறை வடமா கறல் அம்பர் ஐயா
றணியார் பெருவேளூர் விளமர் தெங்கூர்
சேறை துலைபுக லூரக லாதிவை
காதலித் தானவன் சேர்பதியே

மனவஞ்சர் மற்றோட முன்மாத ராரு
மதிகூர் திருக்கூட லில்ஆல வாயும்
இனவஞ் சொலிலா இடைமா மருதும்
இரும்பைப் பதிமா காளம் வெற் றியூரும்
கனமஞ் சினமால் விடையான் விரும்புங்
கருகா வூர்நல் லூர்பெரும் புலியூர்
தனமென் சொலிற்றஞ்ச மென்றே நினைமின்
தவமாம் மலமா யினதா னறுமே.

மாட்டூர் மடப்பாச் சிலாச்சி ராமம்
முண்டீச் சரம்' வாத வூர்வார ணாசி
காட்டூர் கடம்பூர் படம்பக்கங் கொட்டூங்
கடலொற்றி யூர்மற் றுறையூ ரவையும்
கோட்டூர் திருவாமாத் தூர்கோ ழம்பமுங்
கொடுங்கோவ லூர்திருக் குணவாயில்

குலாவு திங்கட்
சடையான் குளிரும் பரிதி நியமம்
போற்றூ ரடியார் வழிபா டொழியாத்தென்
புறம்பயம் பூவணம் பூழி யூரும்
காற்றூர் வரையன் றெடுத்தான் முடிதோள்
நெரித்தா னுறைகோயி லென்றென்று நீகருதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்குன்றம் ஓத்தூர் நிறைநீர் மருகல்
    நெடுவாயில் குறும்பலா நீடுதிரு
நற்குன் றம்வலம் புரம்நா கேச்சரம்
    நளிர்சோலை யுஞ்சேனை மாகாளம் வாய்மூர்
கற்குன்ற மொன்றேந்தி மழைத டுத்த
    கடல்வண் ணனும்மா மலரோனுங் காணாச்
சொற்கென் றுந்தொலை விலாதா னுறையுங்
    குடமூக் கென்றுசொல் லிக்குலா வுமினே.

குத்தங் குடிவே திகுடி புனல்சூழ்
    குருந்தங் குடிதே வன்குடி மருவும்
அந்தங் குடிதண் டிருவண் குடியும்
    அலம்புஞ் சலந்தன் சடைவைத் துகந்த
நித்தன் நிமலன் உமையோ டுங்கூட
    நெடுங்கா லம்உறை விடமென்று சொல்லாப்
புத்தர் புறங்கூறிய புன் சமணர்
    நெடும்பொய் களைவிட் டுநினைந் துய்ம்மினே.

அம்மா னையருந் தவமா கிநின்ற
    அமரர் பெருமான் பதியான வுன்னிக்
கொய்ம்மா மலச்சோலை குலாவு கொச்சைக்
    கிறைவன் சிவஞான சம்பந்தன் சொன்ன
இம்மாலை யீரைந்தும் இருநி லத்தில்
    இரவும் பகலுந் நினைந்தேத்தி நின்று
விம்மா வெருவா விரும்பும் அடியார்
    விதியார் பிரியார் சிவன்சே வடிக்கே.

திருச்சிற்றம்பலம்

**பாடம் : 1. ஆறணி, 2. நனிப்பள்ளி, 3. மயிண்டீச்சரம்.**

**இப்பதிகம், சிவபெருமான் எழுந்தருளிய சிவத்தலங்களின் பெயர்களைக் கோவையாக அமைத்து வாழ்த்தி ஓதி அருளியதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாவுக்கரசு சுவாமிகள்

# திருக்ஷேத்திரக்கோவை

ஆறாந் திருமுறை - பொது பண் : திருத்தாண்டகம்

### கோயிற்றிறம்

திருச்சிற்றம்பலம்

தில்லைச் சிற்றம்பலமுஞ் செம்பொன் பள்ளி
தேவன் குடிசிராப் பள்ளி தெங்கூர்
கொல்லிக் குளிரறைப் பள்ளி கோவல்
வீரட்டங் கோகரணங் கோடி காவும்
முல்லைப் புறவம் முருகன் பூண்டி
முழையூர் பழையாறை சத்தி முற்றங்
கல்லிற் றிகழ்சீரார் காளத் தியுங்
கயிலாய நாதனையே காண லாமே. 1

ஆரூர்மூ லத்தானம் ஆனைக் காவும்
ஆக்கூரில் தான்தோன்றி மாடம் ஆவூர்
பேரூர் பிரமபுரம் பேரா வூரும்
பெருந்துறை காம்பீலி பிடவூர் பேணுங்
கூரார் குறுக்கைவீ ரட்டா னமுங்
கோட்டூர் குடமூக்கு கோழம் பமுங்
காரார் கழுக்குன்றுங் கானப் பேருங்
கயிலாய நாதனையே காண லாமே. 2

இடைமரு தீங்கோ யிராமேச் சுரம்
இன்னம்பர் ஏரிடவை ஏமப் பேறூர்
சடைமுடி சாலைக் குடிதக் களூர்
தலையாலங் காடு தலைச்சங் காடு
கொடுமுடி குற்றாலங் கொள்ளம் பூதூர்
கோத்திட்டை கோட்டாறு கோட்டுக் காடு
கடைமுடி கானூர் கடம்பந் துறை
கயிலாய நாதனையே காண லாமே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சில் இளமர் ஏம நல்லூர்
இலம்பையங் கோட்டூர் இறையான் சேரி
அச்சிறு பாக்க மளப்பூர் அம்பர்
ஆவடு தண்டுறை அழுந்தூர் ஆறை
கச்சினங் கற்குடி கச்சூர் ஆலக்
கோயில் கரவீரங் காட்டுப் பள்ளி
கச்சிப் பலதளியும் ஏகம் பத்துங்
கயிலாய நாதனையே காண லாமே. 4

கொடுங்கோளூர் அஞ்சைக் களஞ்செங் குன்றூர்
கொங்கணங் குன்றியூர் குரக்குக் காவும்
நெடுங்களம் நன்னிலம் நெல்லிக் காவும்
நின்றியூர் நீடூர் நியம நல்லூர்
இடும்பா வனமெழுமூர் ஏழூர் தோழூர்
எறும்பியூர் ஏராரும் ஏம கூடங்
கடம்பை யிளங்கோயில் தன்னி லுள்ளுங்
கயிலாய நாதனையே காண லாமே. 5

மண்ணிப் படிக்கரை வாழ்கொளி புத்தூர்
வக்கரை மந்தாரம் வார ணாசி
வெண்ணி விளத்தொட்டி வேள்விக் குடி
விளமர் விராடபுரம் வேட்க ளத்தும்
பெண்ணை யருட்டுறைதண் பெண்ணா கடம்
பிரம்பில் பெரும்புலியூர் பெருவே ளூருங்
கண்ணை களர்க்காறை கழிப்பா லையுங்
கயிலாய நாதனையே காண லாமே. 6

வீழி மிழலைவெண் காடு வேங்கூர்
வேதி குடிவிசய மங்கை வியலூர்
ஆழியகத் தியான்பள்ளி அண்ணா மலை
ஆலங் காடும் அரதைப் பெரும்
பாழி பழனம்பனந் தாள்பா தாளம்
பராய்த்துறை பைஞ்ஞீலி பனங்காட் டூர்தண்
காழி கடல்நாகைக் காரோ ணத்துங்
கயிலாய நாதனையே காண லாமே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உஞ்சேனை மாகாளம் ஊறல் ஓத்தூர்
உருத்திர கோடி மறைக்காட் டுள்ளும்
மஞ்சார் பொதியின்மலை தஞ்சை வழுவூர்
வீரட்டம் மாதானங் கேதா ரத்தும்
வெஞ்சமாக் கூடல்மீ யச்சூர் வைகா
வேதிச்சுரம் விவீச்சுரம் வொற்றி யூருங்
கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக் கையுங்
கயிலாய நாதனையே காண லாமே. 8

திண்டீச்சரஞ் சேய்ஞலூர் செம்பொன் பள்ளி
தேவூர் சிரபுரஞ்சிற் றேமஞ் சேறை
கொண்டீச்சரங் கூந்தலூர் கூழையூர் கூடல்
குருகாவூர் வெள்ளடை குமரி கொங்கு
அண்டர் தொழுமதிகை வீரட் டானம்
ஐயா றசோகந்தி ஆமாத் தூருங்
கண்டியூர் வீரட்டங் கருகா வூருங்
கயிலாய நாதனையே காண லாமே. 9

நறையூரிற் சித்தீச் சரம்நள் ளாறு
நாரையூர் நாகேச்சரம் நல்லூர் நல்ல
துறையூர் சோற்றுத்துறை சூல மங்கை
தோணிபுரந் துருத்தி சோமீச் சரம்
உறையூர் கடலொற்றி யூரூற் றத்தூர்
ஓமாம் புலியூரோர் ஏட கத்துங்
கறையூர் கருப்பறியல் கன்றாப் பூருங்
கயிலாய நாதனையே காண லாமே. 10

புலிவலம் புத்தூர் புகலூர் புன்கூர்
புறம்பயம் பூவணம் பொய்கை நல்லூர்
வலிவலம் மாற்பேறு வாய்மூர் வைகல்
வலஞ்சுழி வாஞ்சியம் மருகல் வன்னி
நிலமலிநெய்த் தானத்தோ டெத்தா னத்தும்
நிலவுபெருங் கோயில்பல கண்டாற் றொண்டீர்
கலிவலிமிக் கோனைக்கால் விரலாற் செற்ற
கயிலாய நாதனையே காண லாமே. 11

திருச்சிற்றம்பலம்

இப்பதிகம், சிவத்தலங்களின் பெயர்களைக் கோவையாக அமைத்து வாழ்த்தி ஓதி அருளியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்

# ஊர்த்தொகை

ஏழாந் திருமுறை பண் : பழம்பஞ்சுரம்

## கோயிற்றிறம்

திருச்சிற்றம்பலம்

காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே கானப் பேரூராய்
கோட்டூர்க் கொழுந்தே அழுந்தூ ரரசே கொழுநற் கொல்லேறே
பாட்டூர் பலரும் பரவப் படுவாய் பனங்காட் டூரானே
மாட்டூ ரறவா துன்னைப் பாடப் பணியாயே. 1

கொங்கிற் குறும்பிற் குரக்குத் தளியாய் குழகா குற்றாலா
மங்குல் திரிவாய் வானோர் தலைவா வாய்மூர் மணவாளா
சங்கக் குழையார் செவியா அழகா அவியா அனலேந்திக்
கங்குல் புறங்காட் டாடீ அடியார் கவலை களையாயே. 2

நிறைக்காட் டானே நெஞ்சத் தானே நின்றி யூரானே
மறைக்காட் டானே புனல்சேர் சடையாய் அனல்சேர் கையானே
மறைக்காட் டானே புனல்சேர் துறையாய் மாகோ ணத்தானே
இறைக்காட் டாயே எங்கட் குன்னை எம்மான் தம்மானே. 3

ஆரூர் அத்தா ஐயாற் றமுதே அளப்பூர் அம்மானே
காரூர் பொழில்கள் புடைசூழ் புறவில் கருகா வூரானே
பேரூ ருறைவாய் பட்டிப் பெருமான் பிறவா நெறியானே
பாரூர் பலரும் பரவப் படுவாய் பாசூர் அம்மானே. 4

மருக லுறைவாய் மாகா ளத்தாய் மதியஞ் சடையானே
அருகற் பிணிநின் னடியார் மேல அகல அருளாயே
கருகற் குரலாய் வெண்ணிக் கரும்பே கானூர்க் கட்டியே
பருகப் பணியாய் அடியார்க் குன்னைப் பவளப் படியானே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கூர் பிணிநின் னடியார் மேல அகல அருளாயே
வேங்கூர் உறைவாய் விளமர் நகராய் விடையார் கொடியானே
நாங்கூர் உறைவாய் தேங்கூர் நகராய் நல்லூர் நம்பானே
பாங்கூர் பலிதேர் பரனே பரமா பழனப் பதியானே. 6

தேனைக் காவல் கொண்டு விண்ட கொன்றைச் செழுந்த ஈராய்
வானைக் காவல் கொண்டு நின்றார் அறியா நெறியானே
ஆனைக் காவில் அரனே பரனே அண்ணா மலையானே
ஊனைக் காவல் கைவிட் டுன்னை உகப்பார் உணர்வாரே. 7

துருத்திச் சுடரே நெய்த்தா னத்தாய் சொல்லாய் கல்லாலா
பருத்தி நியமத் துறைவாய் வெயிலாய்ப் பலவாய்க் காற்றானாய்
திருத்தித் திருத்தி வந்தென் சிந்தை இடங்கொள் கயிலாயா
அருத்தித் துன்னை அடைந்தார் வினைகள் அகல அருளாயே. 8

புலியூர்ச் சிற்றம் பலத்தாய் புகலூர்ப் போதா மூதூரா
பொலிசேர் புரம்மூன் றெரியச் செற்ற புரிபுன் சடையானே
வலிசேர் அரக்கன் தடக்கை ஐஞ்ஞான் கடர்த்த மதிசூடீ
கலிசேர் புறவிற் கடவூ ராளீ காண அருளாயே. 9

கைம்மா வுரிவை யம்மான் காக்கும் பலவூர் கருத்துன்னி
மைம்மாந் தடங்கண் மதுரம் அன்ன மொழியாள் மடச்சிங்கடி
தம்மான் ஊரன் சடையன் சிறுவன் அடியன் தமிழ்மாலை
செம்மாந் திருந்து திருவாய் திறப்பார் சிவலோ கத்தாரே. 10

திருச்சிற்றம்பலம்

**இப்பதிகம், சிவத்தலங்களின் பெயர்களைக் கோவையாக அமைத்து வாழ்த்தி ஓதி அருளியதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

# திருப்பிரமபுரம்

முதற்றிருமுறை — பண் : வியாழக்குறிஞ்சி

## சிவனுருவம்

**(பரையின் வியாபகமும், பஞ்சாக்கர செபமும் பெற்று, ஆலய வழிபாட்டில் தலைப்பட்டு நிற்கின்ற ஆன்மா, அகக்கண்ணினாலே சிவத்தின் வடிவைத் தரிசித்து ஆனந்த முற்று நிற்கும் அநுபூதி நிலையே சிவனுருவம் ஆகும்.)**

திருச்சிற்றம்பலம்

ஓருரு வாயினை மானாங் காரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை
இருவரோ டொருவ னாகி நின்றனை.

ஓரா னீழல் ஒண்கழல்' இரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்டமுன் றாகக் கோட்டினை
இருநதி அரவமோ டொருமதி சூடினை
ஒருதா ளீரயின் மூவிலைச் சூலம்

நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி ஈடழித் துரித்தனை
ஒருதனு இருகால்த வளைய வாங்கி
முப்புரத் தோடு நானிலம் அஞ்சக்

கொன்று தலத்துற அவுணரை யறுத்தனை
ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்
முக்குணம் இருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை யொருங்கிய மனதோடு
இருபிறப் போர்ந்துமுப் பொழுதுகுறை முடித்து

நான்மறை யோதி ஐவகை வேள்வி
அமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இகலிய மைந்துணர் புகலி யமர்ந்தனை
பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமூ வுலகும் புதையமேல் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையாத இருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை

வரபுர மென்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை யெடுத்த இருதிறல் அரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை யமர்ந்தனை

ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியு முணராக் காழி யமர்ந்தனை
எச்சனே ழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறு பதமும் ஐந்தமர் கல்வியும்
மறைமுதல் நான்கும்

மூன்று காலமுந் தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்
அனைய தன்மையை ஆதலின் நின்னை
நினைய வல்லவர் இல்லைநீள் நிலத்தே.

திருச்சிற்றம்பலம்

**பாடல் : 1. உன்கழல் சிவபாத விருதயர் நித்திய கருமங்களை முடித்துக் கொண்டு, தம் குமாரராகிய ஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகங்களை ஓதிய பின்னரே போசனம் செய்யும் நியமத்தைக் கொண்டார். இவ்வாறு சிலகாலம் நிகழ, ஞானசம்பந்தர் தாம்பாடும் பதிகங்கள் பெருகுதலை அறிந்து தம் தந்தையார் கொள்கைக்குத் தடைவராதபடி அதுவரை இயற்றியுள்ள திருப்பதிகங்களின் பொருள்கள்யாவும் அமைத்து இப்பதிகம் ஓதி அருளியதாகும். இதனை நாடோறும் ஓதின் எல்லாப் பதிகங்களையும் ஓதின பயன்வரும் என்பதாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

# திருக்கடவூர்மயானம்

இரண்டாந் திருமுறை பண்: காந்தாரம்

## சிவனுருவம்

திருச்சிற்றம்பலம்

வரிய மறையார் பிறையார் மலையோர் சிலையா வணக்கி
எரிய மதில்க ளெய்தா ரெறிய முசல முடையார்
கரிய மிடறு முடையார் கடவூர் மயானம் அமர்ந்தார்
பெரிய விடைமேல் வருவார் அவரெம் பெருமா னடிகளே. 1

மங்கை மணந்த மார்பர் மழுவாள் வலனொன் றேந்திக்
கங்கை சடையிற் கரந்தார் கடவூர் மயானம் அமர்ந்தார்
செங்கண் வெள்ளே றேறிச் செல்வஞ் செய்யா வருவார்
அங்கை யேறிய மறியார் அவரெம் பெருமா னடிகளே. 2

ஈட லிடமி மிசைய வேறி மழுவொன் றேந்திக்
காட திடமா வுடையார் கடவூர் மயானம் அமர்ந்தார்
பாட லிசைகொள் கருவி படுதம் பலவும் பயில்வார்
ஆட லரவ முடையார் அவரெம் பெருமா னடிகளே. 3

இறைநின் றிலங்கு வளையா ளிளையா ளொருபா லுடையார்
மறைநி ன்றிலங்கு மொழியார் மலையார் மனத்தின் மிசையார்
கறைநின் றிலங்குபொழில்சூழ் கடவூர் மயானம் அமர்ந்தார்
பிறைநின் றிலங்கு சடையார் அவரெம் பெருமா னடிகளே. 4

வெள்ளையெருத்தின் மிசையார் விரிதோ டொருகா திலங்கத்
துள்ளு மிளமான் மறியார் சுடர்பொற் சடைகள் துலங்கக்
கள்ள நகுவெண் டலையார் கடவூர் மயானம் அமர்ந்தார்
பிள்ளை மதிய முடையார் அவரெம் பெருமா னடிகளே. 5

பொன்றா துதிரு மணங்கொள் புனைபூங் கொன்றை புனைந்தார்
ஒன்றா வெள்ளே றுயர்த்த துடையா ரதுவே யூர்வார்
கன்றா வினஞ்சூழ் புறவிற் கடவூர் மயானம் அமர்ந்தார்
பின்றாழ் சடையார் ஒருவர் அவரெம் பெருமா னடிகளே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாச மான களைவார் பரிவாக் கமுத மனையார்
ஆசை தீரக் கொடுப்பார் அலங்கல் விடைமேல் வருவார்
காசை மலர்போல் மிடற்றார் கடவூர் மயானம் அமர்ந்தார்
பேச வருவார் ஒருவர் அவரெம் பெருமா னடிகளே. 7

செற்ற வரக்கன் அலறத் திகழ்சே வடிமேல் விரலால்
கற்குன் றடர்த்த பெருமான் கடவூர் மயானம் அமர்ந்தார்
மற்றொன் றிணையில் வலிய மாசில் வெள்ளி மலைபோல்
பெற்றொன் றேறி வருவார் அவரெம் பெருமா னடிகளே. 8

வருமா கரியின் உரியார் வளர்புன் சடையார் விடையார்
கருமா னுரிதோ லுடையார் கடவூர் மயானம் அமர்ந்தார்
திருமா லொடுநான் முகனுந் தேர்ந்துங் காணமுன் னெண்ணாப்
பெருமான் எனவும் வருவார் அவரெம் பெருமா னடிகளே. 9

தூய விடைமேல் வருவார் துன்னா ருடைய மதில்கள்
காய வேவச் செற்றார் கடவூர் மயானம் அமர்ந்தார்
தீய கருமஞ் சொல்லுஞ் சிறுபுன் தேரர் அமணர்
பேய்பே யென்ன வருவார் அவரெம் பெருமா னடிகளே. 10

மரவம் பொழில்சூழ் கடவூர் மன்னு மயானம் அமர்ந்த
அரவ மசைத்த பெருமான் அகல மறிய லாகப்
பரவு முறையே பயிலும் பந்தன் செஞ்சொன் மாலை
இரவும் பகலும் பரவி நினைவார் வினைகள் இலரே.

திருச்சிற்றம்பலம்

**இத்தலம் : சோழநாட்டில் காவிரிக்குத் தென்கரையில் உள்ளது. சுவாமி : பெரிய பெருமானடிகள், பிரமபுரீசுவரர் தேவி அமலக்குயமின்னம்மை. இப்பதிகம், நட்புரிமை கொண்ட திருக்கடவூர்க் குங்குலியக்கலய நாயனாரது இல்லத்திற்கு எழுந்தருளி அளவளாவி விருந்தினை நுகர்ந்து, பின்னர்க் குங்குலியக்கலய நாயனார் முதலிய அடியார்களோடு திருமெய்ஞ்ஞானத் திருக்கோயிலுக்குச் சென்று இறைவனைத் தரிசித்தபோது ஓதி அருளியதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசு சுவாமிகள்

# கோயிற்றிருப்பதிகம்

நான்காந் திருமுறை    திருவிருத்தம்    பண் : கொல்லி

## சிவனுருவம்

திருச்சிற்றம்பலம்

பாளை யுடைக்கமு கோங்கிப்பண் மாட நெருங்கி யெங்கும்
வாளை யுடைப்புனல் வந்தெறி வாழ்வயற் றில்லை தன்னுள்
ஆள வுடைக்கழற் சிற்றம் பலத்தரனாடல் கண்டாற்
பீளை யுடைக்கண்க ளாற்பின்னைப் பேய்த்தொண்டர் காண்பதென்னே. 1

பொருவிடை யொன்றுடைப் புண்ணிய மூர்த்தி புலியதளன்
உருவுடை யம்மலை மங்கை மணாளன் உலகுக்கெல்லாம்
திருவுடை யந்தணர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
திருவடி யைக்கண்ட கண்கொண்டுமாற்றினிக் காண்பதென்னே. 2

தொடுத்த மலரொடு தூபமுஞ் சாந்துங்கொண் டெப்பொழுதும்
அடுத்து வணங்கு மயனொடு மாலுக்குங் காண்பரியான்
பொடிக்கொண் டணிந்துபொன் னாகிய தில்லைசிற் றம்பலவன்
உடுத்த துகில் கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. 3

வைச்ச பொருள்நமக் காகுமென் றெண்ணி நமச்சிவாய
அச்ச மொழிந்தேன் அணிதில்லை அம்பலத் தாடுகின்ற
பிச்சன் பிறப்பிலி பேர்நந்தி உந்தியின் மேலசைத்த
கச்சின் அழகுகண்டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே. 4

செய்ஞ்ஞன்ற நீலம் மலர்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
மைஞ்ஞன்ற வொண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞன் றெரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான்
கைஞ்ஜின்ற ஆடல்கண் பாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனத்தை நீக்கி உலகறிய வென்னை ஆட்கொண்டவன்
தேனொத் தெனக்கினி யான்தில்லைச் சிற்றம் பலவனெங்கோன்
வானத் தவருய்ய வன்னஞ்சை உண்டகண் டத்திலங்கும்
ஏனத் தெயிறுகண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே. 6

தெரித்த கணையால் திரிபுர மூன்றுஞ்செந் தீயின் மூழ்க
எரித்த இறைவன் இமையவர் கோமான் இணையடிகள்
தரித்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
சிரித்த முகங்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. 7

சுற்று மமரர் சுரபதி நின்திருப் பாதமல்லாற்
பற்றொன் றிலோமென் றழைப்ப பரவையுள் நஞ்சையுண்டான்
செற்றங் கநங்கனைத் தீவிழித் தான்தில்லை அம்பலவன்
நெற்றியிற் கண்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. 8

சித்தத் தெழுந்த செழுங்கம லத்தன்ன சேவடிகள்
வைத்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
முத்தும் வயிரமு மாணிக்கந் தன்னுள் விளங்கியதூ
மத்த மலர்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. 9

தருக்கு மிகுத்துத் தன்றோள் வலியுன்னித் தடவரையை
வரைக்கைக ளாலெடுத் தார்ப்ப மலைமகள் கோன்சிரித்து
அரக்கன் மணிமுடி பத்து மணிதில்லை அம்பலவன்
நெருக்கி மிதித்த விரல்கண்ட கண்கொண்டு காண்பதென்னே. 10

திருச்சிற்றம்பலம்

**இத்தலம் : சோழநாட்டில் காவிரிக்கு வடகரையில் உள்ளது. கனகசபை, சுவாமி : திருமூலநாதர், தேவி : சிவகாமியம்மை. திருமூலட்டானம், சுவாமி, திருமூலநாதர். தேவி : உமையம்மை. இப்பதிகம், பொன்னம்பலத்தில் எழுந்தருளிய நடராசப் பெருமானைத் தரிசித்தபோது ஓதி அருளியதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசு சுவாமிகள்

# திருப்பூவணம்

ஆறாந் திருமுறை திருத்தாண்டகம்

## சிவனுருவம்

திருச்சிற்றம்பலம்

வடிவேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியந் தோன்றுந் தோன்றுங்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றுங்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 1

ஆணாகிப் பெண்ணாய வடிவு தோன்றும்
அடியவர்கட் காரமுத மாகித் தோன்றும்
ஊணாகி ஊர்திரிவா னாகித் தோன்றும்
ஒற்றைவெண் பிறைதோன்றும் பற்றார் தம்மேற்
சேணாக வரைவில்லா லெரித்தல் தோன்றுஞ்
செத்தவர்தம் எலும்பினாற் செறியச் செய்த
பூணாணும் அரைஞாணும் பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 2

கல்லாலின் நீழற் கலந்து தோன்றுங்
கவின்மறையோர் நால்வர்க்கு நெறிக ளன்று
சொல்லாகச் சொல்லியவா தோன்றுந் தோன்றுஞ்
சூழரவு மான்மறியுந் தோன்றுந் தோன்றும்
அல்லாத காலனைமுன் அடர்த்தல் தோன்றும்
ஐவகையால் நினைவார்பால் அமர்ந்து தோன்றும்
பொல்லாத புலாலெலும்பு பூணாய்த் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைமலிந்த மழுவாளு மானுந் தோன்றும்
பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை தோன்றும்
நடைமலிந்த விடையோடு கொடியுந் தோன்றும்
நான்மறையின் ஒலிதோன்றும் நயனந் தோன்றும்
உடைமலிந்த கோவணமுங் கீளுந் தோன்று
மூரல்வெண் சிரமாலை உலாவித் தோன்றும்
புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 4

மயலாகுந் தன்னடியார்க் கருளுந் தோன்றும்
மாசிலாப் புன்சடைமேல் மதியந் தோன்றும்
இயல்பாக இடுபிச்சை ஏற்றல் தோன்றும்
இருங்கடல்நஞ் சுண்டிருண்ட கண்டந் தோன்றுங்
கயல்பாயக் கடுங்கலுழிக் கங்கை நங்கை
ஆயிரமா முகத்தினொடு வானிற் றோன்றும்
புயல்பாயச் சடைவிரித்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 5

பாராழி வட்டத்தார் பரவி யிட்ட
பன்மலரும் நறும்புகையும் பரந்து தோன்றுஞ்
சீராழித் தாமரையின் மலர்க ளன்ன
திருந்தியமா நிறத்தசே வடிகள் தோன்றும்
ஓராழித் தேருடைய இலங்கை வேந்தன்
உடல்துணித்த இடர்பாவங் கெடுப்பித் தன்று
போராழி முன்னீந்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னடியார்க் கருள்புரிந்த தகவு தோன்றுஞ்

சதுர்முகனைத் தலையரிந்த தன்மை தோன்றும்

மின்னனைய நுண்ணிடையாள் பாகந் தோன்றும்

வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்தல் தோன்றுந்

துன்னியசெஞ் சடைமேலோர் புனலும் பாம்புந்

தூயமா மதியுடனே வைத்தல் தோன்றும்

பொன்னனைய திருமேனி பொலிந்து தோன்றும்

பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 7

செறிகழலுந் திருவடியுந் தோன்றுந் தோன்றும்

திரிபுரத்தை எரிசெய்த சிலையுந் தோன்றும்

நெறியதனை விரித்துரைத்த நேர்மை தோன்றும்

நெற்றிமேல் கண்தோன்றும் பெற்றந் தோன்றும்

மறுபிறவி யறுத்தருளும் வகையுந் தோன்றும்

மலைமகளுஞ் சலமகளும் மலிந்து தோன்றும்

பொறியரவும் இளமதியும் பொலிந்து தோன்றும்

பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 8

அருப்போட்டு முலைமடவாள் பாகந் தோன்றும்

அணிகிளரும் உருமென்ன அடர்க்குங் கேழல்

மருப்போட்டு மணிவயிரக் கோவை தோன்றும்

மணமலிந்த நடந்தோன்றும் மணியார் வைகைத்

திருக்கோட்டில் நின்றதோர் திறமுந் தோன்றுஞ்

செக்கர்வான் ஒளிமிக்குத் திகழ்ந்த சோதிப்

பொருப்போட்டி நின்றதிண் புயமுந் தோன்றும்

பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கணைந்த சண்டிக்கு மருளி யன்று
தன்முடிமேல் அலர்மாலை யளித்தல் தோன்றும்
பாங்கணைந்து பணிசெய்வார்க் கருளி யன்று
பலபிறவி அறுத்தருளும் பரிசு தோன்றுங்
கோங்கணைந்த கூவிளமும் மதமத் தமுங்
குழற்கணிந்த கொள்கையொடு கோலந் தோன்றும்
பூங்கணைவேள் உருவழித்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 10

ஆரொருவர் உள்குவார் உள்ளத் துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்
வாருருவப் பூண்முலைநன் மங்கை தன்னை
மகிழ்ந்தொருபால் வைத்துகந்த வடிவுந் தோன்றும்
நீருருவக் கடலிலங்கை அரக்கர் கோனை
நெறுநெறென அடர்த்திட்ட நிலையுந் தோன்றும்
போருருவக் கூற்றுதைத்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 11

**பாடம் : 1. வடியேறு. 2. ஆருருவ வுள்குவார். இத்தலம், பாண்டி நாட்டில் உள்ளது. சுவாமி : பூவணநாதர் தேவி : மின்னம்மை இப்பதிகம், இறைவனின் திருக்காட்சிகள் பலவற்றையும் பாராட்டிப் போற்றி ஓதி அருளியதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

# திருக்கடவூர் மயானம்

ஏழாம் திருமுறை பண் : பழம்பஞ்சுரம்

## சிவனுருவம்

திருச்சிற்றம்பலம்

மருவார் கொன்றை மதிசூடி மாணிக் கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்குந் தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 1

விண்ணோர் தலைவர் வெண்புரிநூல் மார்பர் வேத கீதத்தர்
கண்ணார் நுதலர் நகுதலையர் கால காலர் கடவூரர்
எண்ணார் புரமூன் றெரிசெய்த இறைவர் உமையோ ரொருபாகம்
பெண்ணாண் ஆவர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 2

காயும் புலியின் அதளுடையர் கண்டர் எண்தோட் கடவூரர்
தாயுந் தந்தை பல்லுயிர்க்குந் தாமே யாய தலைவனார்
பாயும் விடையொன் றதுவேறிப் பலிதேர்ந் துண்ணும் பரமேட்டி
பேய்கள் வாழும் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 3

நறைசேர் மலரைங் கணையானை நயனத் தீயாற் பொடிசெய்த
இறைய ராவர் எல்லார்க்கும் இல்லை யென்னா தருள்செய்வார்
பறையார் முழவம் பாட்டோடு பயிலுந் தொண்டர் பயில்கடவூர்ப்
பிறையார் சடையார் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 4

கொத்தார் கொன்றை மதிசூடிக் கோள்நா கங்கள் பூணாக
மத்த யானை யுரிபோர்த்து மருப்பு மாமைத் தாலியார்
பத்தி செய்து பாரிடங்கள் பாடி யாடப் பலிகொள்ளும்
பித்தர் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிவார் கீளுங் கோவணமுந் துதைந்து சுடலைப் பொடியணிந்து
பணிமே லிட்ட பாசுபதர் பஞ்ச வடிமார் பினர்கடவூர்த்
திணிவார் குழையார் புரமூன்றுந் தீவாய்ப் படுத்த சேவகனார்
பிணிவார் சடையார் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 6

காரார் கடலின் நஞ்சுண்ட கண்டர் கடவூ ருறைவாணர்
தேரார் அரக்கன் போய்வீழ்ந்து சிதைய விரலா லூன்றினார்
ஊர்தா னாவ துலகேழும் உடையார்க் கொற்றி யூர்ஆரூர்
பேரா யிரவர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 7

வாடா முலையாள் தன்னோடு மகிழ்ந்து கானில் வேடுவனாய்க்
கோடார் கேழற் பின்சென்று குறுகி விசயன் தவமழித்து
நாடா வண்ணஞ் செருச்செய்து ஆவ நாழி நிலையருள்செய்
பீடார் சடையார் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 8

வேழம் உரிப்பர் மழுவானர் வேள்வி அழிப்பர் சிரமறுப்பர்
ஆழி யளிப்பர் அரிதனக்கு ஆனஞ் சுகப்பர்' அறமுரைப்பர்
ஏழை தலைவர் கடவூரில் இறைவர் சிறுமான் மறிக்கையர்
பேழைச் சடையர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 9

மாட மல்கு கடவூரில் மறையோ ரேத்தும் மயானத்துப்
பீடை தீர அடியாருக் கருளும் பெருமா னடிகள்சீர்
நாடி நாவ லாரூரன் நம்பி சொன்ன நற்றமிழ்கள்
பாடும் அடியார் கேட்பார்மேற் பாவ மான பறையுமே. 10

திருச்சிற்றம்பலம்

**பாடம் 1. அரிதனக்கன்(று) ஆனைந்துகப்பர். இப்பதிகம், திருநள்ளாற்றைத் தரிசனம் செய்துகொண்டு இத்தலத்தை அடைந்து வழிபட்டுப் பணிந்து ஓதி அருளியதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

# திருவாழ்கொளிப்புத்தூர்

முதற்றிருமுறை பண் : தக்கராகம்

### திருவடிகள்

**(சிவத்தினைத் தரிசித்த ஆன்மா அச்சிவத்தின் திருவடிகளில் (அருள் நிறைவில்) தலைப்பட்டுப் பேரானந்தப் பெரு வெள்ளத்தில் மூழ்கி, நான் என்ற அகங்காரம் அழிந்து, முதல்வன் அறிவு மாத்திரையாய்த் தான் என நிற்கும் நிலையே திருவடிகள் ஆகும்.)**

திருச்சிற்றம்பலம்

பொடியுடை மார்பினர் போர்விடை யேறிப்
பூதக ணம்புடை சூழக்
கொடியுடை யூர்திரிந் தையங்
கொண்டு பலபல கூறி
வடிவுடை வாணெடுங் கண்ணுமை பாக
மாயவன் வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமல ரிட்டுக்
கறைமிடற் றானடி காண்போம். 1

அரைகெழு கோவண வாடையின் மேலோர்
ஆடர வம்மசைத் தையம்
புரைகெழு வெண்டலை யேந்திப்
போர்விடை யேறிப் புகழ
வரைகெழு' மங்கைய தாகமோர் பாக
மாயவன் வாழ்கொளி புத்தூர்
விரைகமழ் மாமலர் தூவி
விரிசடை யானடி சேர்வோம். 2

பூணெடு நாக மசைத்தன லாடிப்
புன்றலை அங்கையி லேந்தி
ஊணிடு பிச்சையூ ரையம்
உண்டியென் றுபல கூறி
வாணெடுங் கண்ணுமை மங்கையோர் பாக
மாயவன் வாழ்கொளி புத்தூர்த்
தாணெடு மாமல ரிட்டுத்
தலைவன் தாள்நிழல் சார்வோம். 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரிடு கொன்றையோர் வெண்மதி கங்கை
தாழ்சடைமேலவை சூடி
ஊரிடு பிச்சைகொள் செல்வம்
உண்டியென் றுபல கூறி
வாரிடு மென்முலை மாதொரு பாக
மாயவன் வாழ்கொளி புத்தூர்க்
காரிடு மாமலர் தூவிக்
கறைமிடற் றானடி காண்போம். 4

கனமலர்க் கொன்றை யலங்க லிலங்கக்
காதிலோர் வெண்குழை யோடு
புனமலர் மாலை புனைந்தூர்
புகுதியென் றேபல கூறி
வனமுலை மாமலை மங்கையோர் பாக
மாயவன் வாழ்கொளி புத்தூர்
இனமல ரேய்ந்தன தூவி
எம்பெரு மானடி சேர்வோம். 5

அளைவளர் நாகம சைத்தன லாடி
அலர்மிசை அந்தணன் உச்சிக்
களைதலை யிற்பலி கொள்ளுங்
கருத்தனே கள்வனே யென்னா
வளையொலி முன்கைம டந்தையோர் பாக
மாயவன் வாழ்கொளி புத்தூர்த்
தளையவிழ் மாமலர் தூவித்
தலைவன் தாளிணை சார்வோம். 6

அடர்செவி வேழத்தின் ஈருரி போர்த்து
அழிதலை யங்கையி லேந்தி
உடலிடு பிச்சையோ டையம்
உண்டியென் றுபல கூறி
மடனெடு மாமலர்க் கண்ணியோர் பாக
மாயவன் வாழ்கொளி புத்தூர்த்
தடமல ராயின தூவித்
தலைவன் தாள்நிழல் சார்வோம். 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வரை யொல்க எடுத்தவ ரக்கன்
ஒளிர்கட கக்கை யடர்த்து
அயலிடு பிச்சையோ டையம்
ஆர்தலை யென்றடி போற்றி
வயல்விரி நீல நெடுங்கணி பாக
மாயவன் வாழ்கொளி புத்தூர்த்
சயவரி மாமலர் தூவித்
தாழ்சடை யானடி சார்வோம். 8

கரியவன் நான்முகன் கைதொழு தேத்தக்
காணலுஞ் சாரலு மாகா
எரியுரு வாகியூ ரையம்
இடுபலி யுண்ணியென் றேத்தி
வரியர வல்குல் மடந்தையோர் பாக
மாயவன் வாழ்கொளி புத்தூர்
விரிமல ராயின தூவி
விகிர்தன சேவடி சேர்வோம். 9

குண்டம ணர்துவர்க் கூறைகள் மெய்யிற்
கொள்கையி னார்புறங் கூற
வெண்டலை யிற்பலி கொண்டல்
விரும்பினை யென்று விளம்பி
வண்டமர் பூங்குழல் மங்கையோர் பாக
மாயவன் வாழ்கொளி புத்தூர்த்
தொண்டர்கள் மாமலர் தூவத்
தோன்றநின் றானடி சேர்வோம். 10

கல்லுயர் மாக்கடல் நின்றுமு ழங்குங்
கரைபொரு காழிய மூதூர்
நல்லுயர் நான்மறை நாவின்
நற்றமிழ் ஞானசம் பந்தன்
வல்லுயர் சூலமும் வெண்மழு வாளும்
வல்லவன் வாழ்கொளி புத்தூர்ச்
சொல்லிய பாடல்கள் வல்லார்
துயர்கெடு தல்லெளி தாமே. 11

திருச்சிற்றம்பலம்

**பாடம் : 1. விரைகெழு . இத்தலம், சோழநாட்டில் காவிரிக்கு வடகரையில் உள்ளது. சுவாமி : மாணிக்கவண்ணர் தேவி : வண்டமர் பூங்குழலி. இப்பதிகம், இத்தலத்து எழுந்தருளிய இறைவனைத் தரிசித்தபோது ஓதி அருளியதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாவுக்கரசு சுவாமிகள்

# திருவதிகை வீரட்டானம்

ஆறாந் திருமுறை திருவடித் திருத்தாண்டகம்

## திருவடிகள்

திருச்சிற்றம்பலம்

அரவணையான் சிந்தித் தரற்றும் மடி
அருமறையான் சென்னிக் கணியா மடி
சரவணத்தான் கைதொழுது சாரும் மடி
சார்ந்தார்கட் கெல்லாஞ் சரணா மடி
பரவுவார் பாவம் பறைக்கும் மடி'
பதினெண் கணங்களும் பாடும் மடி
வீரவுநீர்த் தென் கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி. 1

கொடுவினையா ரென்றுங் குறுகா வடி
குறைந்தடைந்தார் ஆழாமைக் காக்கும் மடி
படுமுழவம் பாணி பயிற்றும் மடி
பதைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்த வடி
கடுமுரணே றூர்ந்தான் கழற்சே வடி
கடல்வையங் காப்பான் கருதும் மடி
நெடுமதியங் கண்ணி அணிந்தா னடி
நிறைகெடில வீரட்டம் நீங்கா வடி. 2

வைதெழுவார் காமம் பொய் போகா வடி
வஞ்சவலைப் பாடொன் றில்லா வடி
கைதொழுது நாமேத்திக் காணும் மடி
கணக்கு வழக்கைக் கடந்த வடி
நெய்தொழுது நாமேத்தி ஆட்டும் மடி
நீள்விசும்பை யூடறுத்து நின்ற வடி
தெய்வப் புனற்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரும்பித்த செஞ்ஞாயி றேய்க்கும் மடி
அழுகெழுத லாகா அருட்சே வடி
சுரும்பித்த வண்டினங்கள் சூழ்ந்த வடி
சோமனையுங் காலனையுங் காய்ந்த வடி
பெரும்பித்தர் கூடிப் பிதற்றும் படி
பிழைத்தார் பிழைப்பறிய வல்ல வடி
திருந்து நீர்த் தென்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி. 4

ஒருகாலத் தோன்றாகி நின்ற வடி
ஊழிதோ றூழி உயர்ந்த வடி
பொருகழலும் பல்சிலம்பும் ஆர்க்கும் மடி
புகழ்வார் புகழ்தகைய வல்ல வடி
இருநிலத்தார் இன்புற்றங் கேத்தும் மடி
இன்புற்றார் இட்டபூ ஏறும் மடி
திருவதிகைத் தென்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி. 5

திருமகட்குச் செந்தா மரையா மடி
சிறந்தவர்க்குத் தேனாய் விளைக்கும் மடி
பொருளவர்க்குப் பொன்னுரையாய் நின்ற வடி
புகழ்வார் புகழ்தகைய வல்ல வடி
உருவிரண்டும் ஒன்றோடொன் றொவ்வா வடி
உருவென் றுணரப் படாத வடி
திருவதிகைத் தென்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி, 6

உரைமாலைக ரெல்லா முடைய வடி
உரையால் உணரப் படாத வடி
வரைமாதை வாடாமை வைக்கும் மடி
வானவர்கள் தாம்வணங்கி வாழ்த்தும் மடி
அரைமாத் திரையில் அடங்கும் மடி
அகலம் அளக்கிற்பா ரில்லா வடி
கரைமாங் கலிக்கெடில நாடன் னடி
கமழ்வீரட் டானக்கா பாலி யடி. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நறுமல ராய்நாறு மலர்ச்சே வடி
நடுவா யுலகநா டாய வடி
செறிகதிருந் திங்களுமாய் நின்ற வடி
தீத்திரளா யுள்ளே திகழ்ந்த வடி
மறுமதியை மாசு கழுவும் மடி
மந்திரமுந் தந்திரமும் ஆய வடி
செறிகெடில நாடர் பெருமா னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி. 8

அணியளவுஞ் சேயனவு மல்லா வடி
அடியார்கட் காரமுத மாய வடி
பணிபவர்க்குப் பாங்காக வல்ல வடி
பற்றற்றார் பற்றும் பவள வடி
மணியடி பொன்னடி மாண்பா மடி
மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்ல வடி
தணிபாடு தண்கெடில நாடன் னடி
தகைசார் வீரட்டத் தலைவன் னடி. 9

அந்தா மரைப்போ தலர்ந்த வடி
அரக்கனையும் ஆற்றல் அழித்த வடி
முந்தாகி முன்னே முளைத்த வடி
முழங்கழலாய் நிண்ட வெம் மூர்த்தி யடி
பந்தாடு மெல்விரலான் பாகன் னடி
பவளத் தாவரையே போல்வா னடி
வெந்தார் சுடலைநீ றாடும் மடி
வீரட்டங் காதல் விமலன் னடி. 10

திருச்சிற்றம்பலம்

**பாடம் : 1. பறிக்கும்மடி 2. திரைவிரவுதென், 3. எறிகெடில், 4. நின்ற. இப்பதிகம், இறைவன் திருவடிகளின் தன்மைகளைப் பற்றித் துதித்து ஒதி அருளியதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்

# திருப்புன்கூர்

பண் : தக்கேசி ஏழாந்திருமுறை

## திருவடிகள்

திருச்சிற்றம்பலம்

அந்த ணாளனுன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்தன் ஆருயி ரதனை
வவ்வினாய்க் குன்றன் வன்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்நமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தை யால்வந்துன் திருவடி அடைந்தேன்
செழும்பொழிற்றிருப் புன்கூருளானே. 1

வையக முற்றும் மாமழை மறந்து
வயலில் நீரிலை மாநிலந் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை யென்ன
ஒலிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்
பெய்யும் மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளுஞ்
செய்கை கண்டுநின் திருவடி அடைந்தேன்
செழும்பொழிற்றிருப் புன்கூ ருளானே. 2

ஏத நன்னிலம் ஈரறு வேலி
ஏயர் கோனுற்ற இரும்பிணி தவிர்த்துக்
கோத னங்களின் பால்கறந் தாட்டக்
கோல வெண்மணற் சிவன்றன்மேற் சென்ற
தாதை தாளற எறிந்தசண் டிக்குன்
சடைமி சைமல ரருள்செயக் கண்டு
பூத வாளிநின் பொன்னடி அடைந்தேன்
பூம்பொழிற்றிருப் புன்கூர் ருளானே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்ற மிழ்வல்ல ஞானசம் பந்தன்
நாவினுக் கரையகன் நாளைப்போ வானும்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப் பன்கணம் புல்லன்என் றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதுங்
கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்
பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூ ருளானே. 4

கோல மால்வரை மத்தென நாட்டிக்
கோளர வுசுற்றிக் கடைந்தெ ழுந்த
ஆல நஞ்சுகண் டவர்மிக இரிய
அமரர் கட்கருள் புரிவது கருதி
நீல மார்க்கடல் விடந்தனை யுண்டு
கண்டத் தேவைத்த பித்தநீ செய்த
சீலங் கண்டுநின் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே. 5

இயக்கர் கின்னரர் யமனொடு வருணர்
இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்க மில்புலி வானர நாகம்
வசுக்கள் வானவர் தானவ ரெல்லாம்
அயர்ப்பொன் றின்றிநின் திருவடி யதனை
அர்ச்சித் தார்பெறும் ஆரருள் கண்டு
திகைப்பொன் றின்றிநின் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூருளானே. 6

போர்த்த நீள்செவி யாளரந் தணர்க்குப்
பொழில்கொள் ஆல்நிழற் கீழறம் புரிந்து
பார்த்த னுக்கன்று பாசுப தங்கொடுத்
தருளி னாய்பண்டு பகீரதன் வேண்ட
ஆர்த்து வந்திழி யும்புனற் கங்கை
நங்கை யாளைநின் சடைமிசைக் கரந்த
தீர்த்த னேநின்றன் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவெயில் செற்றஞான் றுய்ந்த மூவரில்
இருவர் நின்றிக் கோயிலின் வாய்தல்
காவ லாளரென் றேவிய பின்னை
ஒருவன் நீகரி காடரங் காக
மானை நோக்கியோர் மாநட மகிழ
மணிமு ழாமுழக் கவருள் செய்த
தேவ தேவநின் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே. 8

அறிவி னான்மிக்க அறுவகைச் சமயம்
அவ்வ வர்க்கங்கே ஆரருள் புரிந்து
எறியு மாகடல் இலங்கையர் கோனைத்
துலங்க மால்வரைக் கீழடர்த் திட்டுக்
குறிகொள் பாடலின் இன்னிசை கேட்டுக்
கோல வாளொடு நாளது கொடுத்த
செறிவு கண்டுநின் திருவடி அடைந்தேன்
செழும்பொழிற்றிருப் புன்கூருளானே. 9

கம்ப மால்களிற் றின்னுரி யானைக்
காமற் காய்ந்ததோர் கண்ணுடை யானைச்
செம்பொ னேயொக்குந் திருவுரு வானைச்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே
உம்ப ராளியை உமையவள் கோனை
ஊரன் வன்றொண்டன் உள்ளத் தாலுகந்து
அன்பி னாற்சொன்ன அருந்தமி ழைந்தோடு
ஐந்தும் வல்லவர் அருவினை இலரே. 10

திருச்சிற்றம்பலம்

**இத்தலம், சோழநாட்டில் காவிரிக்கு வடகரையில் உள்ளது. சுவாமி : சிவலோக நாயகர், தேவி : சொக்கநாயகி அம்மை. இப்பதிகம், கலிக்காம நாயனாருடன் நட்புக் கொண்டபின், அவருடன் இத்தலத்திற்கு எழுந்தருளி, இறைவனைத் தரிசித்தபோது ஓதி அருளியதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

# திருப்பூந்தராய்

மூன்றாந்திருமுறை பண் : காந்தார பஞ்சமம்

### அருச்சனை

**(அருச்சனை பாட்டே ஆகும் என்றபடி ஆன்மா திருவடிப் பேறு பெற்றுச் சிவானந்தப் பெருக்கில் திளைத்திருக்குமாறு செய்த சிவத்தின் செயலை நினைந்து நினைந்து கசிந்துருகிப் பாடும் நிலையே அருச்சனை ஆகும்.)**

திருச்சிற்றம்பலம்

பந்து சேர்விர லாள்பவ ளத்துவர்
வாயி னாள்பனி மாமதி போல்முகத்(து)
அந்த மில்புக ழாள்மலை மாதொடும் ஆதிப்பிரான்
வந்து சேர்விடம் வானவ ரெத்திசை
யுந் நிறைந்துவ லஞ்செய்து மாமலர்
புந்தி செய்திறைஞ் சிப்பொழிற் பூந்தராய் போற்றதுமே. 1

காவி யங்கருங் கண்ணி னாள்கனித்
தொண்டை வாய்க்கதிர் முத்தநல் வெண்ணகைத்
தூவி யம்பெடை யன்னந டைச்சுரி மென்குழலாள்
தேவி யுந்திரு மேனியோர் பாகமாய்
ஒன்றி ரண்டொரு மூன்றொடு சேர்பதி
பூவி லந்தண னொப்பவர் பூந்தராய் போற்றதுமே. 2

பைய ராவரு மல்குல் மெல்லியல்
பஞ்சின் நேரடி வஞ்சிகொள் நுண்ணிடைத்
தைய லாளொரு பாலுடை எம்மிறை சாருமிடஞ்
செய்யெ லாங்கழு நீர்கம லம்மலர்த்
தேற லூறலிற் சேறுல ராதநற்
பொய்யி லாமறை யோர்பயில் பூந்தராய் போற்றதுமே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளி நாண்முகை மொட்டியல் கோங்கின்
அரும்பு தேன்கொள் குரும்பைமூ வாமருந்(து)
உள்ளி யன்றபைம் பொற்கல சத்தியல் ஒத்தமுலை
வெள்ளி மால்வரை யன்னதோர் மேனியின்
மேவி னார்பதி வீமரு தண்பொழில்
புள்ளி னந்துயில் மல்கிய பூந்தராய் போற்றதுமே. 4

பண்ணி யன்றெழு மென்மொழி யாள்பகர்
கோதை யேர்திகழ் பைந்தளிர் மேனியோர்
பெண்ணி யன்றமொய்ம் பிற்பெரு மாற்கிடம் பெய்வளையார்
கண்ணி யன்றெழு காவிச்செ ழுங்கரு
நீல மல்கிய காமரு வாவிகள்
புண்ணி யருமறை யும்பதி பூந்தராய் போற்றதுமே. 5

வாணி லாமதி போல்நுத லாள்மட
மாழை யொண்கணாள் வண்தர ளந்நகை
பாணி லாவிய இன்னிசை யார்மொழிப் பாவையொடுஞ்
சேணி லாத்திகழ் செஞ்சடை யெம்மண்ணல்
சேர்வ துசிக ரப்பெருங் கோயில்சூழ்
போணி லாநுழை யும்பொழிற் பூந்தராய் போற்றதுமே. 6

காரு லாவிய வார்குழ லாள்கயற்
கண்ணி னாள்புயற் காலொளி மின்னிடை
வாரு லாவிய மென்முலை யாள்மலை மாதுடனாய்
நீரு லாவிய சென்னி யன்மன்னி
நிகரு நாமம்முந் நான்கு நிகழ்பதி
போரு லாவெயில் சூழ்பொழிற் பூந்தராய் போற்றதுமே. 7

காசை சேர்குழ லாள்கய லேர்தடங்
கண்ணி காம்பன தோட்கதிர் மென்முலைத்
தேசுத சேர்மலை மாதம ருந்திரு மார் பகலத்(து)
ஈசன் மேவுமி ருங்கயி லையெடுத்
தானை யன்றடர்த் தானிணைச் சேவடி
பூசை செய்பவர் சேர்பொழிற் பூந்தராய் போற்றதுமே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொங்கு சேர்குழ லாள் நிழல் வெண்ணகைக்
கொவ்வை வாய்க்கொடி யேரிடை யாளுமை
பாங்கு சேர்திரு மார்புடை யார்படர் தீயுருவாய்
மங்குல் வண்ணனும் மாமல ரோனும்
மயங்க நீண்டவர் வான்மிசை வந்தெழு
பொங்கு நீரின்மி தந்தநற் பூந்தராய் போற்றதுமே. 9

கலவ மாமயி லாரிய லாள்கரும்(பு)
அன்ன மென்மொழி யாள் கதிர் வாணுதல்
குலவு பூங்குழ லாளுமை கூறனை வேறுரையால்
அலவை சொல்லுவார் தேரம ணாதர்கள்
ஆக்கி னான்றனை நண்ணலும் நல்குநற்
புலவர் தாம்புகழ் பொற்பதி பூந்தராய் போற்றதுமே. 10

தேம்பல் நுண்ணிட யாள் செழுஞ் சேலன
கண்ணி யோடண்ணல் சேர்விடந் தேனமர்
பூம்பொழில்திகழ் பொற்பதி பூந்தராய் போற்றதுமென்று
ஓம்பு தன்மையன் முத்தமிழ் நான்மறை
ஞான சம்பந்தன் ஒண்டமிழ் மாலைகொண்
டாம்ப டியிவை ஏத்தவல் லார்க்கடை யாவினையே. 11

திருச்சிற்றம்பலம்

**பாடம் 1. ஆதிபிரான். இப்பதிகம், இத்தலத்தின் பெருமை முதலியவற்றைப் புகழ்ந்து ஓதி அருளியதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசு சுவாமிகள்

# திருக்கயிலாயம்

போற்றித் திருத்தாண்டகம் ஆறாந் திருமுறை

## அருச்சனை

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் மானாய் போற்றி
காற்றாகி யெங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 1

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாகம் அசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 2

மருவார் புரமூன்றும் எய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடு முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கு முடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாடல் உகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 4

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி எங்கும் பரந்தாய் போற்றி
பேராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வார் ஒருவரையும் இல்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 5

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவரறி யாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாது என் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 6

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமையா துயிரா திருந்தாய் போற்றி

என்சிந்தை நீங்கா இறைவா போற்றி

உமைபாகம் ஆகத் தணைத்தாய் போற்றி

ஊழி யேழான ஒருவா போற்றி

அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி

ஆதி புராணனாய் நின்றாய் போற்றி

கமையாகி நின்ற கனலே போற்றி

கயிலை மலையானே போற்றி போற்றி. 8

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி

முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி

தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி

சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி

ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி

அல்லல் நலிய அலந்தேன் போற்றி

காவாய் கனகத் திரளே போற்றி

கயிலை மலையானே போற்றி போற்றி. 9

நெடிய விசும்போடு கண்ணே போற்றி

நீள அகல முடையாய் போற்றி

அடியும் முடியு மிகலிப் போற்றி

அங்கொன் றறியாமை நின்றாய் போற்றி

கொடிய வன்கூற்றும் உதைத்தாய் போற்றி

கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி

கடிய உருமொடு மின்னே போற்றி

கயிலை மலையானே போற்றி போற்றி 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி

ஓதாதே வேதம் உணர்ந்தாய் போற்றி

எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி

இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி

பண்ணா ரிசையின்சொற் கேட்டாய் போற்றி

பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி

கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி

கயிலை மலையானே போற்றி போற்றி. 11

திருச்சிற்றம்பலம்

பாடம் : 1. நன்று முகந்தாய். இத்தலம், வடநாட்டில் உள்ளது. சுவாமி கயிலாய நாதர், பரமசிவன். தேவி பார்வதி அம்மை இப்பதிகம், திருநாவுக்கரசர் கயிலாய தரிசனம் செய்ய மிக்க சிரமத்தோடு அங்கம் தேய்ந்து வருந்திச் செல்லுங்கால், இறைவன், முனிவர் வடிவம் கொண்டுவந்து, இறைபணி நிற்றலின் உறுதியினை அறிந்து, பின்னர் மறைந்து அருள்புரிந்தபோது, நல்லுடல் பெற்று இறைவனை அருவுருவாகக் கண்டுணர்ந்து ஓதி அருளியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்
## திருக்கழுக்குன்றம்

ஏழாந் திருமுறை பண் : நட்டபாடை

### அருச்சனை

திருச்சிற்றம்பலம்

கொன்று செய்த கொடுமை யாற்பல சொல்லவே
நின்ற பாவ வினைகள் தாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர் பிரானிடம்
கன்றி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. 1

இறங்கிச் சென்று தொழுமின் இன்னிசை பாடியே
பிறங்கு கொன்றைச் சடையன் எங்கள் பிரானிடம்
நிறங்கள் செய்த மணிகள் நித்திலங் கொண்டிழி
கறங்கு வெள்ளை அருவித் தண்கழுக் குன்றமே. 2

நீளநின்று தொழுமின் நித்தலும் நீதியால்
ஆளும் நம்ம வினைகள் அல்கி யழிந்திடத்
தோளு மெட்டு முடைய மாமணிச் சோதியான்
காள கண்டன் உறையுந் தண்கழுக் குன்றமே. 3

வெளிறு தீரத் தொழுமின் வெண்பொடி யாடியை
முளிறி லங்கு மழுவாளன் முந்தி உறைவிடம்
பிளிறு தீரப் பெருங்கைப் பெய்ம்மத மூன்றுடைக்
களிறு னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. 4

புலைகள் தீரத் தொழுமின் புன்சடைப் புண்ணியன்
இலைகொள் சூலப் படையன் எந்தை பிரானிடம்
முலைக ளுண்டு தழுவிக் குட்டியொ டுமுசுக்
கலைகள் பாயும் புறவில் தண்கழுக் குன்றமே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடமு டைய அடியார் தம்மனத் தேயுற
விடமு டைய மிடறன் விண்ணவர் மேலவன்
படமு டைய அரவன் தான்பயி லும்மிடம்
கடமு டைய புறவில் தண்கழுக் குன்றமே. 6

ஊன மில்லா அடியார் தம்மனத் தேயுற
ஞான மூர்த்தி நட்ட மாடிநவி லும் இடம்
தேனும் வண்டும் மதுவுண் டின்னிசை பாடியே
கான மஞ்ஞை உறையுந் தண்கழுக் குன்றமே. 7

அந்த மில்லா அடியார் தம்மனத் தேயுற
வந்து நாளும் வணங்கி மாலொடு நான்முகன்
சிந்தை செய்த மலர்கள் நித்தலுஞ் சேரவே
சந்தம் நாறும் புறவில் தண்கழுக் குன்றமே. 8

பிழைகள் தீரத் தொழுமின் பின்சடைப் பிஞ்ஞகன்
குழைகொள் காதன் குழகன் தானுறை யும்மிடம்
மழைகள் சாலக் கலித்து நீடுயர் வேயவை
குழைகொள் முத்தஞ் சொரியுந் தண்கழுக் குன்றமே. 9

பல்லில் வெள்ளைத் தலையன் தான்பயி லும்மிடம்
கல்லின் வெள்ளை அருவித் தண்கழுக் குன்றினை
மல்லின் மல்கு திரள்தோ ளூரன் வனப்பினால்
சொல்லல் சொல்லித்தொழுவா ரைத்தொழு மின்களே. 10

திருச்சிற்றம்பலம்

**பாடம் : 1. கந்த நாறும். இத்தலம், தொண்டைநாட்டில் உள்ளது. சுவாமி : வேதகிரீசர், தேவி : பெண்ணினல்லாளம்மை. இப்பதிகம், சிவனடியார்கள் பலர் எதிர்கொள்ள ஆலயத்தை அடைந்து வழிபட்ட போது ஓதி அருளியதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

# கோளறு திருப்பதிகம்

இரண்டாந் திருமுறை பண் : பியந்தைக் காந்தாரம்

**அடிமை**

**(இறைவன் திருவடிகளில் திளைத்துப் பேரின்பமுற்று அதனால் மனமுருகப் பாடும் ஆன்மா, மெய்ஞ்ஞானிகளாகிய திருத்தொண்டர் களோடு கூடிஇருக்கும் நிலையே அடிமை ஆகும்.)**

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம்பி ரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 1

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசை தெய்வ மான பலவும்
அருநெதி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 3

மதிநுதல் மங்கையோடு வடவாலி ருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 4

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 5

வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பிள முலைநன்மங்கை யொரு பாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியும்அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 7

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 8

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 9

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாகம் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனமர் பொழில் கொளாலை விளைசெந்நெல்துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. 11

திருச்சிற்றம்பலம்

**இப்பதிகம் திருஞானசம்பந்தர் சமணர்களைவெல்ல மதுரைக்கு எழுந்தருளிய போது, திருநாவுக்கரசர் சமணரோ மிகக் கொடியர் இப்போது கோள் நிலையும் தீதாய் உள்ளது என்று தடுத்த விடத்துத் திருஞான சம்பந்தர், சிவபெருமான் நம்முடைய சிந்தையே கோயில் கொண்டுள்ளான் நமக்குத் தீங்கு வாராது என்று உறுதி மொழிந்து ஓதி அருளியதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசு சுவாமிகள்

# திருவாரூர்

நான்காந் திருமுறை திருவிருத்தம் பண் : கொல்லி

## அடிமை

திருச்சிற்றம்பலம்

குலம்பலம் பாவரு குண்டர்முன் னேநமக் குண்டுகொலோ
அலம்பலம் பாவரு தண்புனல் ஆரூர் அவிர்சடையான்
சிலம்பலம் பாவரு சேவடி யான்திரு மூலட்டானம்
புலம்பலம் பாவரு தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே. 1

மற்றிட மின்றி மனைதுறந் தல்லுணா வல்லமணர்
சொற்றிட மென்று துரிசுபட் டேனுக்கும் உண்டுகொலோ
விற்றிடம் வாங்கி விசயனோ டன்றொரு வேடுவனாய்ப்
புற்றிடங் கொண்டான்றன் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே. 2

ஒருவடி வின்றிநின் றுண்குண்டர் முன்னமக் குண்டுகொலோ
செருவடி வெஞ்சிலை யாற்புரம் அட்டவன் சென்றடையாத்
திருவுடை யான்திரு வாரூர்த் திருமூலட் டானன் செங்கண்
பொருவிடை யானடித் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே. 3

மாசினை யேறிய மேனியர் வன்கண்ணர் மொண்ணரைவிட்(டு)
யேறினைந் தேசறு வேனுக்கும் உண்டுகொலோ
தேசனை ஆரூர்த் திருமூலட் டானனைச் சிந்தைசெய்து
பூசனைப் பூசுரர் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே. 4

அருந்தும் பொழுதுரை யாடா மணர் திறமகன்று
வருந்தி நினைந்தர னேயென்று வாழ்த்துவேற் குண்டுகொலோ
திருந்திய மாமதில் ஆரூர்த் திருமூலட் டானனுக்குப்
பொருந்துந் தவமுடைத் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீங்கிய தோள்களுந் தாள்களு மாய்நின்று வெற்றரையே
மூங்கைகள் போலுண்ணும் மூடர்முன் னேநமக் குண்டுகொலோ
தேங்கமழ் சோலைத்தென் னாரூர்த் திருமூலட் டானன்செய்ய
பூங்கழ லானடித் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே. 6

பண்ணிய சாத்திரப் பேய்கள் பறிதலைக் குண்டரைவிட்டு
எண்ணில் புகழீசன் தன்னருள் பெற்றேற்கும் உண்டுகொலோ
திண்ணிய மாமதில் ஆரூர்த் திருமூலட் டானனெங்கள்
புண்ணியன் தன்னடித் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே. 7

கரப்பர்கண் மெய்யைத் தலைபறிக் கச்சுகம் என்னுங்குண்டர்
உரைப்பன கேளாதிங் குய்யப்போந் தேனுக்கும் உண்டுகொலோ
திருப்பொலி ஆரூர்த் திருமூலட் டானன் திருக்கயிலைப்
பொருப்பன் விருப்பமர் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே. 8

கையி லிடுசோறு நின்றுண்ணுங் காதல் அமணரைவிட்டு
உய்யு நெறிகண்டிங் குய்யப்போந் தேனுக்கும் உண்டுகொலோ
ஐயன் அணிவயல் ஆரூர்த் திருமூலட் டானனுக்குப்
பொய்யன் பிலாவடித் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே. 9

குற்ற முடைய அமணர் திறமது கையகன்றிட்டு
உற்ற கருமஞ்செய் துய்யப்போந் தேனுக்கும் உண்டுகொலோ
மற்பொலி தோளான் இராவணன் தன்வலி வாட்டுவித்த
பொற்கழ லானடித் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே. 10

திருச்சிற்றம்பலம்

**இத்தலம், சோழநாட்டில் காவிரிக்குத் தென்கரையில் உள்ளது. சுவாமி: வன்மீக நாதர், (புற்றிடங்கொண்டநாதர்), வீதிவிடங்கர், தேவி : அல்லியங்கோதையம்மை. இப்பதிகம், திருத்தொண்டர்கள் திருவாரூர் நகர்ப்புறத்தே வந்து எதிர்கொண்டபோது திருநாவுக்கரசர் புண்ணியம் பெற்றேன் என்று மகிழ்ந்து, சமணர்களின் பழக்க அத்திருத் தொண்டர்களைத் தொழுது, தொண்டர்க்குத் தொண்டராகும் வழக்கங்களை அறியும்படி ஓதி அருளியதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

# திருத்தொண்டத்தொகை

ஏழாந் திருமுறை பண் : கொல்லிக்கௌவாணம்

## அடிமை

திருச்சிற்றம்பலம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 1

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க் கடியேன்
ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்
கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாள்தாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயர்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 2

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 4

வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 5

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல் எறிந்த சாக்கியர்க்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற்றறிவார்க்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 6

பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தர்க் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவார்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 8

கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனாம் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடிப்
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 9

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்

வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்

தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க் கடியேன்

திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்

என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்

இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்

அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்

ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 11

திருச்சிற்றம்பலம்

**பாடம் : 1. தாதையை, 2. அடிச்சார்ந்தார். இப்பதிகம், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஒருநாள் திருவாரூர்ப் பூங்கோயிலை அடைந்தபோது தேவாசிரிய மண்டபத்தில் எண்ணிலாத திருத்தொண்டர்கள் கூடியிருக்கக் கண்டு, இவர்களுக்கு நான் அடியன் ஆகும் நாள் எந்நாள் என்று எண்ணுகையில், சிவபெருமான், தில்லை வாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் என்று முதலடி எடுத்துக் கொடுக்க அப்போது ஓதி அருளியதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

முத்துக்குமாரு + கண்மணி

- காசிப்பிள்ளை + சிவகாமசுந்தரி
  - ஆறுமுகம் + வடிவாம்பிகை
    - தியாகராசா + நல்லம்மா
    - நடராசா + நாகலெட்சுமி
    - பூம்பாவை + சாந்தலிங்கம்
    - உமாதேவி + சரவணமுத்து
    - நவரெத்தினராசா
    - சாந்தநாயகி + சண்முகரெத்தினம்
    - வாகீஸ்வரன் + இந்திராணி
    - உமாதேவன் + தேவிகா
    - அஸ்தநாயகி + ஸ்ரீபதிநாதன்
    - சுவாதியநாயகி + சுதாகரன்
- தங்கம்மா + வேலாயுதர்
  - காமாட்சி + செல்லையா
    - அன்னம்மா + நமசிவாயம்
      - சரஸ்வதி
      - சரோஜினி + சிவராமகுகன்
      - ரதிதேவி + துளசிநாதன்

நவரெத்தினராசா + சரஸ்வதி

- விஸ்ணுகரன் + பிருந்தா
  - சின்மகி
  - பார்கவி
- விசாகை + கஜேந்திரன்
  - காசினி
  - சபரிவாசன்
- கௌசிகன் + சுஜிதா
  - ஜெஸ்வந்
- கார்த்திகாயினி + கேதீஸ்வரன்
  - தர்மிகன்
  - கர்சிகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

எமது குடும்பத்தலைவி அமரர் நவரெத்தினராசா சரஸ்வதி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டவுடனேயே அன்னாரின் இல்லத்திற்கு உடனே வருகை தந்து குடும்ப உறுப்பினர்களை ஆறுதல்படுத்தி தங்களாலான உள உடல் ரீதியான ஒத்துழைப்புக்களை மனமுகந்து வழங்கிய உற்றார் உறவினர்கள் அயலவர்கள் நண்பர்களுக்கும், அமரரினை உடனே வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று ஆற்ற வேண்டிய சேவைகளை உடனுக்குடன் நின்று ஆற்றிய உறவுகள், நண்பர்கள் மற்றும் வைத்தியசாலை வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், பணியாளர்கள், காவல்துறையினர்களுக்கும், இறுதி நிகழ்வுகளை நடாத்துவதற்குரிய ஒழுங்குகளை முன்னின்று நடாத்திய உறவினர்கள், நண்பர்கள், வவுனியா அகிலாண்டேசுரர் சிவாலய அறங்காவலர்கள், பணியாளர்கள், அகிலாண்டேஸ்வரி அருளக பணியாளர்கள், மாணவர்கள், சிவன் முதியோர் இல்ல பணியாளர்கள் மற்றும் அந்தியெட்டி சபீண்டிகரண நிகழ்வுகளை ஒழுங்கு செய்து முழுமையாக நடாத்திய உறவுகள், நண்பர்களுக்கும், இறப்பு செய்தி கேட்டவுடன் நினைவு பதாததைகள், செய்திக் குறிப்புக்கள், துண்டுப் பிரசுரங்கள், சமூக வலைத்தளங்கள், தொலைபேசிகள், பத்திரிகைகள் போன்றவற்றின் மூலம் ஆறுதல் அனுதாங்களை தெரிவித்துக் கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் இன்று நடைபெற்ற ஓராண்டு நிகழ்வுகளில் பங்கு கொண்டு ஆறுதல் அளித்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் பங்குகொண்டவர்களுக்கும், இவ்விடத்தில் தவறுதலாக குறிப்பிடத்தவறிய உறவுகள், நண்பர்கள், பணியாளர்களுக்கும் இவ் நினைவு மலரினை வெளியீட்டு வைக்க உதவிய வாணி கணனிப் பதிப்பகத்தினருக்கும் எமது சிரந்தாழ்த்திய நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றோம்.



**இங்ஙனம்**

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாணி கலைப் பதிப்பகம். தொ.பே: 024 2223658

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org